திராவிடநாடு

26—8—62 | வார வெளியீடு | விலை 16 காசு

"விடுதலைத் தீ!"

—[சுரா]—

★

கோட்டை கொத்தளமும் கொண்டு கொடிகட்டி
கேட்டினைப் புரிந்த கொடுங்கோலர்கள்;
மக்களெழுச்சியால்
நாட்டினை விட்டே நாதியற்று ஓடிய
ஓட்டத்தை வரலாறு சாற்றும்; புலியைப்
பூட்டியே சிறையில் வாட்டியடக்கினும் அது
ஈட்டிய வலிமை போமோ? நாட்டிய குணம் போமோ?
கோலாலடிப்பதும் குண்டால் சுடுவதும் சுதந்திர
குடியாட்சியின் இலட்சணமோ? குருதி குடித்தே
கொடுமையாட்சி நடுத்துவதெல்லாம் எதுவரைக்காம்?
தீ பட்டுப் பற்றெரியும் பெருங்காட்டை; கை
நீரிட்டு அணைத்துவிட முயல்வதுபோல்; தென்னாட்டில்
எழுந்திட்ட விடுதலையைத் தீயை அணைப்பதற்கே
ஏனிந்த அடக்குமுறை? ஏக இந்திய தாசர்களே!

"சந்தேகமற்ற முடிவு"

"திருச்செங்கோட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றி, ஒரு குறிப்பிடத்தக்க செய்தி தான்.

ஏட்டிலே மட்டும் அல்ல; நாட்டின் எதிர்காலத்தைப்பற்றி முழுமையாக எண்ணிப் பார்க்கும் இயல்புள்ளவர் ஒவ்வொருவரும் தம் இதயத்தில் குறித்து வைத்துக்கொண்டு, அமைதி வாய்க்கும் நேரத்தில் செம்மையாக ஆராய்ந்து பார்க்க வேண்டிய செய்தி.

"வெறும் 720 ஓட்டு வித்தியாசத்தில் கிடைத்த வெற்றியும் ஒரு வெற்றியா!" என்று இகழ்பவர் இகழலாம். "ஐந்நூற்றிருபது பேர் கொண்ட மக்கள் சபையில் ஒரு மூலையில் நேற்றுவரை ஏழு தி.மு.க. வினர் உட்கார்ந்திருந்தனர்; நாளை அந்த எழுவரோடு எண்மராகத் திரு. கந்தசாமியும் போய் உட்காரப் போகிறார். அவ்வளவுதானே?" என்று எடுத்தெறிந்து, பேசுபவர் பேசலாம்.

ஆனால்—

ஒரே ஓர் ஓட்டு வித்தியாசம் இருந்தாலும் வெற்றி வெற்றிதான் என்பதை மறவாதவர்களும்;

அமர்ந்திருக்கையில் திரு. கந்தசாமி 'மக்கள் சபையின் 520 உறுப்பினருள் ஒருவர்' என்று கருதப்படுவார் எனினும், எழுந்து நின்று பேசும்போது 'திருச்செங்கோடு தொகுதியைச் சேர்ந்த 4,16,657 வாக்காளர்களின் தனிக்குரல்' என மதிக்கப்படுவார் என்பதை நினைத்துப்பார்க்கக் கூடியவர்களும், இந்த இடைத் தேர்தல் முடிவு பற்றி அவ்வளவு அலட்சியமாக இருக்க மாட்டார்கள் என்பது உறுதி.

திடமிக்க ஓர் அரசாங்கத்துடன் தி.மு.க.மோதி, பெரும் அதிர்ச்சிக்கு உள்ளான காலம். கவர்ச்சியுடன் பிரசாரம் செய்யக்கூடிய பெரும் தலைகள், தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்க்கக்கூடிய செயலாளர்கள்—இவர்களில் பலர் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் செயலற்றுக் கிடக்கும் நேரம்.இந்தப் பலவீன நிலையிலும், கடந்த மூன்று தேர்தல்களாகக் காங்கிரஸ் கட்சியின் கோட்டையாகத் திகழ்ந்து வந்திருக்கும் ஒரு தொகுதியைக் கைப்பற்றி முதன் முறையாகக் கொடி நாட்ட தி. மு. க. வினால் முடிந்திருக்கிறது என்றால், அது அவர்களுக்கு ஒரு சிறப்புமிக்க வெற்றிதான் என்பதை யாரால் மறுக்க முடியும்?

யோசித்துப் பார்க்கும்போது, திருச்செங்கோட்டில் நிகழ்ந்ததைத் தி. மு. க. வின் வெற்றி என்று வர்ணிப்பதைக் காட்டிலும், காங்கிரஸின் தோல்வி என்று சுட்டிக்காட்டுவது இன்னும் பொருத்தமாக இருக்கக்கூடும். காரணம்?

சென்ற பொதுத் தேர்தல்களின் போது தி. மு. க. வேட்பாளருக்கு விழுந்த ஓட்டுகளின் எண்ணிக்கையும், இந்த இடைத் தேர்தலில் கிடைத்துள்ள வாக்குகளின் எண்ணிக்கையும் ஏறத்தாழ ஒன்றே. ஆனால் காங்கிரசின் கதை, வேறு. அன்று டாக்டர் சுப்பராயனை 1,09,799 பேர் ஆதரித்தார்கள். அவரது வாரிசாக வர முயன்ற திரு. செங்கோடக் கவுண்டருக்கு இப்போது வாக்களித்திருப்பவர்களின் எண்ணிக்கையோ 95,555 தான் சுமார் 15,000 ஓட்டு குறைந்திருக்கிறது.

இவ்வளவுக்கும், திருச்செங்கோட்டில் முற்றுகையிடப்பட்டது தனிக் காங்கிரஸ்அல்ல; எதிர்க்கட்சியினர் பலரின் துணைபெற்ற புதிய காங்கிரஸ்.

அதிகாரம் வகிக்கும் கட்சி என்ற முறையில் அதற்கு இயற்கையாக அமைந்திருக்கக்கூடிய பல்வேறு வசதிகள் ஒரு பக்கம் இருக்கட்டும். இந்தத் தடவை, காங்கிரசைக் கம்யூனிஸ்டுகள் மறைமுகமாக ஆதரித்தார்கள். தவிர, சென்ற தேர்தலில் சுமார் 40,000 ஓட்டுக்கள் சம்பாதித்த பிரஜா சோஷலிஸ்டுகள் இம்முறை தங்கள் சார்பாக யாரையும் நிறுத்தாமல் வெளிப்படையாக ஒத்தாசை புரிந்தார்கள். இவ்வளவிருந்தும் காங்கிரஸ் இடறி விழுந்தது என்றால், இடறிவிட்டது என்ன என்பது பரிசீலனைக்குரிய விஷயம் அல்லவா?

ஆண்டவனே மனித உருவில் வந்து அரசாட்சி செய்தபோதிலும், ஆண்டு சில கழிந்ததும், 'போதும் நீங்கள் ஆண்டது, போய்வாருங்கள் என்று விடை கொடுத்து அனுப்ப விழைவதே, உலகெங்கும் உள்ள பொதுமக்களின் இயல்பு—இப்படிச் சிலர் கூறுகிறார்கள்.

'அதற்குள் இன்னொரு தேர்தலா! ஓட்டுச்சாவடிக்குப் படையெடுப்பதைத் தவிர வேறு வேலை கிடையாது என்று நினைத்துவிட்டீர்களா எங்களுக்கு!' என்று பலர் எரிச்சலுடன் ஒதுங்கிவிட்டிருக்கக்கூடும்—இது 'ஹிந்து'வின் ஹேஷ்யம்.

டாக்டர் சுப்பராயன், அகில இந்தியாவும்அறிந்த பிரமுகர். தனிப்பட்ட முறையில் அவருக்கு உள்ள செல்வாக்கே தனி. என்ன இருந்தாலும்' சுப்பராயருக்குக் கிடைத்த ஓட்டு செங்கோடருக்குக் கிடைக்குமா?—பொதுவான கருத்து இது.

விலைவாசி ஏற்றம், பொதுமக்கள் சீற்றம். 'நம் அதிருப்தியைக் காட்டுவதற்கு ஒரே வழி காங்கிரசுக்கு எதிராக வாக்களிப்பது, அல்லது வாக்களிக்காமலே இருந்துவிடுவது' என்று பலர் முடிவு கட்டிவிட்டார்கள்—இப்படியும் ஒரு கருத்து.

மறியல் செய்யப் புகுந்தவர்களை அரசாங்கம் எல்லைமீறித் தண்டித்து விட்டது. அதனால் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது-இது 'மெயில்' விமரிசனம்.

தமிழ் நாடு அமைச்சர் அவையில் சேலத்துக்கு இடம்தரப்படவில்லையே என்ற ஆத்திரம் ஒரு காரணம்—இது ஒரு பத்திரிகை நிருபர் கூற்று.

திருச்செங்கோடு மக்கள் ஏன் தி. மு. க. வுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தார்கள் என்பதற்குக் காரணம் ஏதாயினும் இருந்துவிட்டுப் போகட்டும். விளைவு என்ன?

"பிரிவினைச் சக்திக்கு ஆதரவு தரலாகாது என்றும், அதைஅடக்க வேண்டும் என்றும் ராஜ்ய, யூனியன் அமைச்சர்கள் கூக்குரலிட்டுப் பிரசாரம் செய்தார்கள். ஆனால் திருச்செங்கோடு வாக்காளர்கள் தெளிவான முறையில் தி. மு. க. வுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்து விட்டார்கள். இதிலிருந்து தி. மு. க. வின் அடிப்படை இலட்சியத்திலும் தலைமையிலும் மக்களுக்குப் போதுமான நம்பிக்கை இருக்கிறது என்பது உருசுவாகிறது" என்று பறைசாற்றியிருக்கிறார் திரு. நாஞ்சில் மனோகரன்.

ஓட்டுப்போட்டதற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், (திருச்செங்கோடு தொகுதியில் பெரும்பான்மையினர் செய்ததுபோல்) ஓட்டுப் போடாமல் இருந்ததற்குக் காரணம் எதுவாக இருந்தாலும், முடிவைப் பற்றி எவ்வித சந்தேகமும் இல்லை. தி, மு. க. வுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியும், தேசிய ஒருமைப்பாடு என்ற பயன்மிக்க மரத்தில் விழும் ஒரு கொடிய வெட்டாகும்."

—குமுதம்,

மக்களாட்சி எங்கே?

மலர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (26—8—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 52

"ஆங்கிலேயன் காலத்திலிருந்த அரசு மக்களை மதிக்கவில்லை. பொறுப்போடு நடந்துகொள்ளவில்லை. ஆகவே, அந்த நாளில் மறியல் தேவைப்பட்டது. அரசை எதிர்த்து ஆரவாரம் தேவைப்பட்டது. இப்போது அப்படியில்லை. நிலைமை மாறியிருக்கிறது. வாக்குச் சீட்டு மூலம் ஆட்சியை மாற்றுவதற்கு மக்களுக்கு வாய்ப்பிருக்கின்றது. இப்போது அந்தக் காலத்து ஆரவாரம் முதலிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவது பொருளற்ற செய்கை" என்பதுபோல் அமைச்சர் பக்தவத்சலனார் பேசியிருக்கிறார் அண்மையில்.

ஆங்கிலேயன் கூடத்தான் சொன்னான் அந்நாளில் 'நாங்கள் நடத்துவது மக்களாட்சி' என்று. அவன் கூடத்தான் வாக்குச் சீட்டுகள் தந்திருந்தான். அந்நாளில் கூடத்தான் தேர்தல்கள் நடந்தன. அந்த ஆங்கிலேயனை, அந்த அந்நியனை நல்லவனுக்கி விட்டார்களே சொந்த நாட்டில், சொந்த ஆட்சி நடத்துவதாகக் கூறிக்கொண்டு தூற்றல் பிரசாரம் செய்து திரியும் இவர்கள்.

இன்றைய நிலையில், இந்தியத் துணைக் கண்டத்தில் குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழகத்தில் மக்களாட்சி குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது என்பதை அண்மைக் காலத்தில் நிகழ்ந்துள்ள — இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற—கொடிய நிகழ்ச்சிகளைக் காண்போர், நல்லுள்ளமும், பொது நோக்கும், கோடாக் குணமுமுள்ளோர் மறுப்பதற்கு முன்வரமாட்டார்கள்.

மக்களின் வாழ்வு துன்ப வாதையாக மாறிக் கிடக்கும் இன்றைய நிலையில், மேலும் அந்த வாதையைப் பெருக்கும் வகையில் மக்கள் அனைவருக்கும் அன்றாடம் மிகமிக இன்றியமையாமல் தேவைப்படும் முக்கிய பொருட்கள் எல்லாவற்றிற்கும் வரிபோட்டது அரசு. மன்பதையில் தாழ்ந்த மட்டத்திற் கிடப்போர் முதற்கொண்டு சாமானியர் அனைவரும் பயணம் செய்யும் பயணப் பேருந்திகளுக்கு வரி போட்டது. இதனால் தேவைப் பொருட்களின் விலையெல்லாம் ஏறிற்று. பிரயாணி வண்டிகளின் கட்டணம் ஏறிற்று.

இவற்றைப் பல படியாக எடுத்துக்கூறியபோது மக்கள் ஆட்சிப் பண்பு பற்றிப் பேசிக்கொண்டு அராசகம் புரியும் காங்கிரசு அரசு தன்னுடைய பெரும்பான்மை எனும் மேட்டிமையைக் காட்டி அசட்டை புரிந்தது. எனவே, கழகம் வேறு வழியின்றி ஒருநாள் மறியல், அடையாள மறியல், அறவழி மறியல், காந்திய வழி மறியல் நடத்திற்று.

அந்த அறவழி மறியலில் கழகத்தார் பதினுயிரக் கணக்கில் ஈடுபட்டனர். அவருள் ஆயிரக் கணக்கானேரை மட்டும் காங்கிரசு அரசு சிறையிலிட்டது. சிறையிலிடப்பட்ட கழகத் தோழர்களை எந்த நாகரிக மனிதனும் வெட்கித் தலைகுனியும் வகையில் தமிழக காங்கிரசு அரசு படுத்திய பாடு, சிறையில் நிகழ்த்திய தடியடிக் கொடுமைகள் எந்தச் சர்வாதிகார ஆட்சியிலும் நடக்கக் கூடாதவை என்றே கூறலாம்.

மக்களாட்சி நடக்கும் ஒரு நாட்டில்இப்படியெல்லாம் நடைபெறுமா? மக்கள் முடிவு சொல்லட்டும்!

இவையெல்லாம் நடைபெறவில்லையென்று பொறுப்புள்ள அமைச்சர்கள் சொல்கிறார்களா? அப்படியானல் நீதி விசாரணை நடத்த ஏன் தயக்கம்?

இந்த மாநிலத்தின் எதிர்க் கட்சித் தலைவர் ஒருநாள் முதலமைச்சராக வரவேண்டியவர், சிறையிலிருக்கிறார்.

நாடெங்கணுமுள்ள தி. மு. கழகத் தோழர்கள் ஒரே வகையான அறவழி மறியலில்தான் 19-7-62 அன்று ஈடுபட்டனர். ஆனல்,

அவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை ஊருருக்கும் வெவ்வேறு மாதிரியாக 7 மாதக் கடுங்காவல், 4 மாதக் கடுங்காவல், 3 மாதக் கடுங்காவல் 2 மாதக் கடுங்காவல் என்றிருப்பானேன்? இதுதான் மக்களாட்சியா?

"அடிமைகளை வைத்து வேலைவாங்கும் முறை இன்னும் ஒழிந்துவிடவில்லை. அந்தமுறையை எவ்வளவு கேவலமாகக்கையாளலாமோ, அவ்வளவு கேவலமாகச் சிறையில் கையாளுகிறார்கள்" என்று ஆங்கிலேயன் காலத்துச் சிறையைப்பற்றி அந்நாள் காங்கிரசுக்காரர்கள் சொன்னார்கள். அன்றையநிலை இன்று மாறியிருக்கின்றதா? அதனினும் மிகக் கொடிதானதாகவல்லவா

இன்றைய சிறை நிலைமை மாறியிருக்கின்றது. இது தான் மக்களாட்சியா?

கோவாப் பகுதியை ஆண்ட போர்ச்சுகல்காரன் கூடத்தான் அவன் தடியாட்சியை மக்களாட்சி என்று சொல்லிக்கொண்டான்.

புதுச்சேரி முதலிய பகுதிகள் பிரெஞ்சுத் தளையில் சிக்குண்டு கிடந்த காலத்தில் அங்கே ஆட்சிக்கு எதிர்க் கருத்துள்ளோர்களை இரவோடு இரவாகக் கடத்திக் கொண்டுபோய்க் கோணிப்பையில் போட்டு நடுக்கடலில் எறிந்துவிட்டு வந்தனர் அந்த ஆட்சியின் எடுபிடிகள். அவர்கள்கூடத்தான் அப்போது சொன்னார்கள், அங்கே நடப்பது மக்களாட்சி என்று.

அவர்கள் எல்லாம் இப்போது இருக்குமிடம் எங்கே? காமராசரே, பக்தவத்சலனாரே சிந்தித்துப்பார்த்தீர்களா?

சிறையில் உள்ள தொண்டர்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்—கேவலமாக நடத்தப்படுகிறார்கள் —பழிவாங்கும் முறையில் நடத்தப்படுகிறார்கள் — உணவு வசதி சரியாகக் கவனிக்கப்படுவதில்லை — ஒருவர் தங்கக்கூடிய இடத்தில் ஒன்பது பேரைப் போட்டடைக்கிறார்கள் என்பன போன்ற புகார்களை அரசவையில் வைத்தால், அரசு, அதாவது சம்பந்தப்பட்ட அமைச்சர்கூட அல்ல, இன்னொரு அமைச்சர் பதில் சொல்ல வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்து விடுகிறார்கள்.

"ஓ! அதுவா? அப்படியொன்றும் எங்களுக்குத் தகவலில்லையே! அப்படி ஏதாவது நடந்திருந்தாலும், அது சிறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விஷயம். நாங்கள் அதில் தலையிடுவதற்கில்லை.'' என்று எளிதாக ஏனோதானோ என்ற முறையில் பதில் கூறி வருகிறார்கள்.

ஆனால், அமைச்சர் அவையிலோ ஒவ்வொரு துறைக்கென்றும் ஒவ்வொரு அமைச்சர் அமர்த்தப்படுகிறார்.

சம்பந்தப்பட்ட அமைச்சர், அவர்தம் பொறுப்பிலுள்ள துறைபற்றிய புகார்கள் யாதாயினும் வந்தால் அவற்றை விசாரித்து ஆவன செய்யவேண்டியவராவர்.

ஆனால், நிலைமை இங்கு அப்படி இல்லை. யாராவது ஏதாவது ஒரு புகார் அல்லது விண்ணப்பம் செய்தால் சம்பந்தப்படாத ஒரு அமைச்சர் தாமேதான் எதற்கும் பதில் சொல்லுபவர்–சொல்லுந் தகுதி பெற்றவர் என்ற முறையில், கூறப்பட்ட புகார்களையும் செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் அலட்சியம் செய்துவிடும் போக்கு இங்கு மிகவும் தாராளமாகக் கையாளப்படுகிறது.

அதிலும், எதிர்க்கட்சியினர் ஏதாவது குறைகளைக் கூறி இவை நிவர்த்திக்கப்படவேண்டுமென்று கேட்டு விட்டால், போதும், உடனே அமைச்சர்களுக்கு அதிக சினம் வந்துவிடுகிறது. இவர்கள் யார், குறை முறையிடுவதற்கு? குறைகளைக் கண்டுபிடித்துப் பரிகாரம் காண்பவர்கள் நாமாயிற்றே! எனவே இவர்களுக்கு நாமே ஏன் பதில்கூறவேண்டும் என்றெண்ணிவிடுகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு நாங்கள்தான் உண்மையான ஜனநாயகவாதிகள் என்றுவேறு கூறிக்கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆகாவழி செல்லும் போக்கு ஒரு நல்லாட்சிக்கு ஆகாது; அடாது என்பதற்காகவேதான் எதிர்க்கட்சி என்று ஒன்று இருந்து ஆளுங்கட்சி வழி தவறி, வகைதவறி, முறைதவறி நடக்க முனையும்போது, முன்வந்து நின்று இந்த வழி செல்லாதீர்; இது மக்களாட்சிப் பண்புக்கு ஏற்புடைய வழி அல்ல என்று கூறும் நிலைமை ஏற்படுகிறது. அந்தச் சமயத்தில், ஆளுங்கட்சி அலட்சியம் செய்வது ஜனநாயக முறைக்கே இழுக்காகும் என்பதனை எடுத்துக்காட்டவே இப்படிப்பட்ட அறப்போர்கள் ஒரு ஜனநாயக ஆட்சியில் ஏற்படுகின்றது. அதனை ஆளுங்கட்சி மதித்து நடப்பதே முறையாகும்.

உண்மையளவில் ஒரு நாட்டில் மக்களாட்சிப் பண்போடு அரசுக்கட்டில் ஏறியிருப்போர்கூடச் சில சமயங்களில் தவறு இழைத்தால், அதை மாற்றுக் கருத்தினர் எடுத்துச்சொல்லும்போது அசட்டை காட்டினால், ஆட்சியிலிருப்போரிடம் மேலும் இடித்துக் கூறுதற்கு ஆவாரமும், அறவழி மறியலும் வேண்டற்பாலனவே என்பது அரசியல் அறிஞர்கள் கண்ட துணிபு.

தமிழகத்தில் தி. மு. கழகத் தோழர்கள் அறவழி மறியலில் ஈடுபட்டது போன்றே வடக்கிலும் சில இடங்களில் மறியல்கள் நடந்துள்ளன. அங்கெல்லாம் அரசு காட்டாத கெடுபிடிகளை இங்கே காங்கிரசு அரசு காட்டியுள்ளதே! ஏன்? குறிப்பாக போபாலில் எச். வி. காமத் என்னும் பாராளுமன்ற உறுப்பினர் முதலானோர் வரி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினர். அவர்களை அரசு கைதுசெய்தது. வழக்குத் தொடுத்தது. எனினும் மிகச் சில நாட்களில் வழக்கினைத் திரும்பப்பெற்று அவர்களை விடுதலை செய்துவிட்டது. ஆனால், இங்கே தமிழக அரசு ரிமாண்டுக்காலத்தையும்கூட நீடிக்கின்றதே! கடுங்காவல் தண்டனைகளும் கொடுக்கின்றதே! இதுதானா மக்களாட்சிப் பண்பாடு? எங்கே மக்களாட்சி?

கனகு

1. பரணன்.

கிழக்கே வெளுப்பு மெல்ல மெல்லத் தென்பட்டுக் கொண்டு வந்தது. அந்த வெளுப்பினை ஆர்வத்தோடு, என்றுமில்லா ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தன, காத்துக் கிடந்தன ஆயிரம், ஆயிரம், ஆயிரம் நல்லிதயங்கள். அந்த ஆயிரம், ஆயிரம், ஆயிரம் நல்லிதயங்களில் அதோ மெல்லத் துயில் நீத்து எழுந்தமர்பவன்போல் எழுகின்றானே பைந்தமிழ்ப் புலவன் பரணன், அவனுடைய தூய உள்ளமும் ஒன்று.

பரணன் துயில் நீத்து எழவில்லை. துயில்கொண்டிருந்தால் அல்லவோ துயில் நீத்து எழ முடியும்! உறக்கக் கலக்கம் என்பது என்றுமே பரணனைத் தொட்டது கிடையாது. தொடர்ந்தது இல்லை. அது பற்றியது உண்டா என்பதுபற்றி அவன் நினைவுக்கு எட்டிய வரையில் எதுவுமே உற்றது அறியான். விழிப்பிருந்தும், கிழக்கின் வெளுப்பைக் காண வேண்டுமென்ற விழைவிருந்தும் அவனால் இத்தனை நாளும் அந்தக் கிழக்கின் வெளுப்பைக் காணத்தான் முடியவில்லை. அது ஏன்? அதற்கு விடை இருள் விழைவார் பரணனின் எதிரிகள் என்பதே சாலும்.

ஆமாம், இன்று பரணன் எவ்வாறு வெளுப்பினைக் காண்கிறான் என்கிறீர்கள்? அவனை இருட்குகையிலிருந்து மாற்றார் வெளியேற்றி விட்டார்களா? அல்லது மாற்றாரின் கொடிய கரம் வலிமை இழந்துவிட்டதா? இன்றேல், மாற்றார் மனம் மாறிவிட்டனரா? இருள் வேண்டாம். ஒளியே சால்பு. நன்மைக்கு வேண்டுவது ஒளி. தூய்மைக்கு வேண்டுவது ஒளி. வாழ்வுக்கு வேண்டுவது ஒளி. அன்புக்கு வேண்டுவது ஒளி. இன்பத்திற்கு வேண்டுவது ஒளி. ஒளியின்றேல் உலகு இல்லை'—என்றெல்லாம் உணர்ந்துகொண்டு விட்டனரா? இருளையோட்டும் நல்லெண்ணம் அவர்கள் உள்ளத்தே முளைத்து விட்டதா? இருளின் துணை ஒரு சிலர்க்கே பயன் விளைக்கும். விரல் விட்டு எண்ணத்தக்க மிகமிக அற்பத் தொகையினர் நல்வாழ்வு வாழ்வதற்கென்று—அதுவும் தற்காலிக நல்வாழ்வு—மிக மிகப் பெரும்பான்மையோரின் வாழ்வைக் குலைக்கின்ற வல்லிருள், வளத்தைப் பறிக்கின்ற காரிருள், நலத்தைக் கெடுத்து நாசம் விளைக்கும் நட்டநடு நிசியிருள் கூடாது என்று தெளிவு பெற்றுவிட்டனரா?

இல்லை, இல்லை! 'இருள் தீயது; ஒளி நல்லது' என்று உணராதவர்கள் அல்லரே அவர்கள். இருள் தீயது என்று தெரியும், நன்றாகத் தெரியும் அவர்களுக்கு. ஒளி நல்லது என்பதை அறிவார், நன்கு அறிவார் ஆன்றோர். உள்ளதை உள்ளபடி செய்ய அவர்கள் மனந்தான் ஒருப்படவில்லை. உள்ளதை உள்ளபடி உணர்ந்து அதனைச் செயற்படுத்த விழையாத தன்மையும் ஒருவகைத் தெளிவின்மைதான் என்கிறீர்களா? அது வேறு செய்தி.

அந்த உள்ளத் தெளிவை, இயல்பான தன்மையை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டு முன் வருவதற்கு அவர்கள்பால் குறுக்கே நிற்பன அன்னார் கொண்டிருக்கும் காழ்ப்பு. அன்னார் பட்டுக்கொண்டிருக்கும் வயிற்றெரிச்சல். அன்னார் அடைந்திருக்கும் பொறாமை. அவர்கள் பெற்றிருக்கும் ஆற்றாமை. அவர்களுள்ளும் சிலர் உள்ளனர். அன்னோர் தெளிவு தெளிவு என்று ஓயாது ஒழியாது கூறிக்கொண்டேயிருப்பர். நம்மைப் பார்த்து அவர்கள் தெளிவில்லாத நெஞ்சங்கள் என்று எள்ளுவர்; இகழ்ந்துரையாடுவர். அந்தக் கள்வர்களைப் பற்றி இங்கு நான் குறிப்பிடவில்லை. குறிப்பிட வேண்டுவதும் இல்லை. பாவம் அவர்கள்! தெளிவு என்றால் பனந்தெளிவும், தென்னந் தெளிவுந்தான் அவர்கள் அறிந்தனவெல்லாம். மற்றத் தெளிவெல்லாம் அவர்களுக்கு மயக்கந்தான். மருட்சிதான்.

இதோ இந்த நிகழ்ச்சிகளைப் பாருங்கள். நான் குறிப்பிட வந்தோரின் காழ்ப்பையும், ஆற்றாமையையும், பொறாமையையும், வயிற்றெரிச்சலையும், எல்லாவற்றிற்கும் மேலாக அறியாமையையும் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

2. கொடுங்கரத்தான்.

பரணன் அடைபட்டுக் கிடக்கும் காரிருட்சிறையை மேற்பார்வையிடக் கொடுங்கரத்தான் வந்தான். அவன் வரும் ஒலி கேட்டுப் பரணன் அவனை விளித்தான்.

"என்னை இந்த வெஞ்சிறையில், இருட் குகையில் போட்டு மூடிவிட்டு உலகமே இருள் மயமாகத்தான் இருக்கின்றது என்று சாதிக்க நினைக்கின்றீர்கள் நீங்கள்!"

கொடுங்கரத்தான் கடகட வென்று சிரித்தான். கெக்கலியிட்டுச் சிரித்தான். "பைத்தியக்

காரரே! ஒளியாவது மண்ணுங்கட்டியாவது! எல்லா இடங்களிலும் இதே மாதிரிதான் இருக்கின்றது. ஒளி என்பதே இதுதான். அது உங்களுக்குத் தெரியவில்லையென்றால் நாங்கள் என்ன செய்வது?''

"வெளியில்கூட இப்படித்தான் இருளாகக் கிடக்கின்றதா? கதிர் ஒளியே கிடையாதா?''

"கதிர் ஒளியாவது, புதிர் ஒளியாவது! ஞாயிற்றின் ஒளி தெரிந்தே நெடுங்காலமாகிவிட்டதே! உங்களுக்குத் தெரியவில்லை அது. நீங்கள் இங்கேயே தங்கிவிட்டீர்கள். நாங்கள் சொல்வதைக் கேட்டு நீங்கள் வெளியே வர ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். வெளியே வந்து பார்த்தால் அல்லவா தெரியும் உங்களுக்கு! வெளியே வெளிச்சம் போட்டுக்கொண்டிருப்பதே நாங்கள் தான். அதாவது இப்போது வெளியே ஒளி இருக்கின்றதென்றால் அதற்குக்காரணம்நாங்கள். ஞாயிறு அல்ல. ஞாயிற்றையும் மிஞ்சிய—இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றல் எங்களுக்குண்டு. அந்த அப்பாற்பட்ட ஆற்றலைக் கொண்டு தான் இப்போது நாங்கள் வெளிச்சம் போடுகின்றோம்! இனி ஞாயிறு என்ற ஒன்றை யாரும் நினைக்கவே வேண்டாம். இனி ஒளி வேண்டுமென்றால் எங்களிடம்தான் வர வேண்டும். ஞாயிறை நம்பினால் மோசம் போவீர்கள்! நாங்கள் சொல்லதை நம்புங்கள். நல்லதைத் தான் நாங்கள் சொல்வோம்! உள்ளதைத்தான் நாங்கள் சொல்வோம்! பரணரே, நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? நான் பொய் சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

"பொய்யா! நீங்கள் சொல்வது வெறும்பொய்யா! யாரால் அப்படிச் சொல்ல முடியும்? பொய் என்ற சொல் இருக்கின்றதே. அதன் பொருள் என்ன தெரியுமா? ஒருவர் கண்ணால் கண்டுள்ள உண்மையை இல்லை என்று சொல்வது பொய். ஒருவர் கருத்துக்கு நன்றாக விளங்கிக் கொண்டிருந்ததை மறைத்துக் கூறுவது பொய். நீங்கள் சொல்வது அது அல்லவே! உண்மைக் கண்ணுக்கு நன்றாகப் புலப்பட்டுக் கொண்டிருப்பதையல்லவா இல்லையென்று முழு மூச்சாகச் சாதிக்கின்றீர்கள். உண்மையறிவுக்கு நன்றாக எட்டிக்கொண்டிருந்ததை எட்டிக்கொண்டிருப்பதையல்லவா நீங்கள் இல்லவே இல்லை என்கிறீர்கள். அதாவது என்னை இந்தக் கொடிய இருட்டறையில்அடைத்துவைத்துக் கொண்டு என் கண் பார்வையைப் பற்றியல்லவா குறைகூறுகிறீர்கள். நான் பார்வை இழந்தவன் என்றல்லவா நீங்கள் ஒரேயடியாகச் சாதிக்கிறீர்கள்! இப்படி நீங்கள் சொல்வதை, நீங்கள் சாதிப்பதைப் பொய் என்று கூறினால் உங்கள் கூற்றைக் குறைத்து மதிப்பிட்டதாகவல்லவா முடியும்! பொய் என்ற சொல்லின் பொருளையே கெடுத்ததாகவல்லவா முடியும்! பொய் என்ற சொல்லையே அவமதித்ததாகவல்லவா முடியும்! நீங்கள் சொல்வது பொய்யல்ல. உங்கள் கூற்று உளறல்! குறை மதியினர்கூட விளக்கமாகப் புரிந்து கொள்ளக்கூடிய சாமானிய உளறல்!''

"என்ன சொன்னாய்! நான் யார் தெரியுமா?''

"தெரியும். நன்றாகத் தெரியும். ஏற்கெனவே நீர் கொடுங்கரத்தார் என்பதை நன்கறிவேன் நான். அந்தக் கரத்தின் கொடிய தன்மை உள்ளத்திலிருந்து இன்னும் சிறிதளவுகூட மாறவில்லை என்பதை இதோ இப்போது நீங்கள் பேசிய இரண்டே வாக்கியங்கள் மெய்ப்பித்துக் காட்டிவிட்டன. உறுதிப்படுத்தி விட்டன.''

"என்ன உளறுகிறாய்!—என் வார்த்தையை உளறல் என்று கூறிவிட்டு அதே கணத்தில் உன் தெளிவின்மையை வெளிப்படுத்திவிட்டாயே! என் வார்த்தைகள் எப்படி நான் கொடுமனத்தான் என்று மெய்ப்பித்துக் காட்டுகின்றன?''

"பாவம், புரியவில்லையா?''

"ஆத்திரத்தைக் கிளப்பாதே! கேட்டதற்குப் பதில் சொல்!''

"வரும்போது என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டு வந்தீர்கள். பன்மைச் சொற்களில் உரையாடினீர்கள்! நான் உங்கள் கூற்று உளறல் என்று கூறியதும் உடனே வெம்மை கொண்டுவிட்டீர்கள். 'சொல்கிறீர்கள்' என்ற பன்மைச்சொல்மாறி, 'சொல்கிறாய்' என்ற ஒருமைப்பதத்தை எடுத்தெடுப்பிற் பயன்படுத்த முனைந்துவிட்டீர்கள். இது ஒன்றே போதாதா உங்கள் கரம் பெயருக்கேற்பக் கொடுங்கரம். உங்கள் மனம் அதே தன்மையைக் கொண்ட கொடு மனம் என்று மெய்ப்பிப்பதற்கு!''

"இது என்ன பொதுமேடை என்று நினைத்தாயா—உன் வார்த்தையை மற்றவர்கள் கேட்டு என்னைப் பற்றிக் குறைவாக நினைப்பதற்கு, சொல்வதற்கு? நீ இங்கே எடுத்துச் சொல்கின்ற நியாயமோ, நான் இங்கே உன்னை இழித்துப் பழித்துப் பேசுகின்ற வார்த்தையோ யார் காதிலும் படுவதற்கு இங்கே வழியில்லை. உன்னை நான் எப்படி வேண்டுமானாலும் திட்டுவேன். உன்னை நான் என்ன வேண்டுமானாலும் செய்யமுடியும். சுவர்களுக்குக் கூடக் காதுகள் உண்டு என்று எவனோ சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். அந்தக் காதுகள் உள்ளதைக் கேட்டுக்கொண்டு, உற்ற போது வெளியிட்டுவிடும் என்று நீ நம்பிக்கொண்டிருக்கலாம். அதற்குக் கூட இங்கே வழியில்லை. இதோ இந்தச் சுவர்களுக்கு அப்பாலும், இப்பாலும் எப்பாலும் பல சுவர்கள் இருக்கின்றன. இந்தச் சுவர்கள் கேட்டவற்றை இவற்றிற்கு அடுத்துள்ள சுவர்கள் கேட்பதற்கு வழியில்லை. அப்படியே கேட்டுவிட்டாலும், அவற்றிற்கும் அடுத்து வேறு வேறு சுவர்கள் உள்ளன. அவை இதுகேட்டவற்றையெல்லாம் மறைத்து மண்ணோடு மண்ணாக்கி விடும்! எங்கும் அவை போகா! எதையுமே அவை எட்டமாட்டா! எவரையும் அவை அணுகா!''

"இது உங்கள் கூற்று!''

"வெறும் கூற்றல்ல, உண்மை!''

"உங்களுடைய கூற்று என் உயிரைக் குடிக்க வரும் கூற்றாக வந்தாலும் நீங்கள் சொல்லுவதை, சொல்லப்போவதை நான் நம்புவதற்கில்லை. நம்பமாட்டேன்!''

கொடுங்கரத்தான் சிறிது நேரம் அப்படியே நிற்கிறான் பேசுதலின்றி, அசைதலுமின்றி. பிறகு தனக்குத் தானே சொல்லிக்கொள்கிறான்: 'இந்தப் பயல் எதைச் சொன்னாலும் அசையமாட்டேன் என்கிறானே! இவனை எப்படி மடக்குவது? இவன் மீது எப்படி இழிவு கற்பிப்பது? நான் சொல்கின்ற ஒரே ஒரு வார்த்தையை இவன் நம்பிவிட்டால் போதும், இருக்கலாம் என்று ஒப்புக் கொண்டுவிட்டால் போதும். அந்த ஒரே ஒரு வார்த்தை மண்ணாங்கட்டியளவு பயன்தரக்கூடியதாக அமைந்துவிட்டால்கூடப் போதும்,

அந்த மண்ணுங்கட்டியை வைத்துக் கொண்டு இமயமலையாக்கிவிடலாம். அதற்கு எப்படிப்பட்ட வார்த்தையைப் போட்டு இவனை வளைத்துப் பிடிக்கலாம்.' சிந்திக்கிருன் கொடுங்கரத்தான். நீண்ட நெடு நேரம் பரணன் எதிரே நின்றபடி சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கிருன். அவனுடைய முறையில்லாத சிந்தனை, நேர்மையில்லாத சிந்தனை மேலும் மேலும் அவனைக் குழப்பத்தில்தான் ஆழ்த்துகின்றதே தவிர, உருவான வேறு எதையும் அளிக்கவில்லை. அப்படியே திரும்பி நடக்கிருன் அவன் பரணனிடம், வேறு பேச்சுக் கொடுக்காமல் வாய்க்குள் ஏதோ முனகிய வண்ணம்.

3. உள்ளமில்லான்

"ஏய், யாரங்கே!"

"வந்தேன் பிரபு."

"ஓடிப்போய் நம் சிறைத் தலைவனை அழைத்துவா!"

"அவர் உங்கள் பேட்டிக்காக வெளியே காத்துக்கொணடுநிற்கின்ருர் பிரபு நெடு நேரமாக!"

"ஓ, உடனே வரச்சொல்!"

வேலைக்காரன் வெளியே ஓடுகிருன்! சிறிது நேரத்தில் உள்ளமில்லான் உள்ளே நுழைகிருன். உள்ளமில்லான் தன் பெயருக்கேற்பக் கோரவுருவோடு கூடியவன். கொடுமையும் வஞ்சமும் நிறைந்த பார்வையினன்.

"வணக்கம் துரையவர்களே! வணக்கம்!"

"ஒ, உள்ளமில்லாஞ? வாரும் வாரும்! என்னைத் துரையென்று அழைக்கின்றீரே! யார் சொல்லித் தந்தது என்னை இப்படி அழைக்கும்படி?"

உள்ளமில்லான் உடனே பதில் சொல்லாமல் நிற்கிருன். 'ஆமாம் யார் சொல்லித் தந்தது எனக்கு இந்தத் துரையென்ற வார்த்தையை! அடடே நான் ஏமாந்து விட்டேனே! இந்த மனிதர் எண்ணத்திலும், செயலிலும் இட்லரையும், ஈச்மனையும் மிஞ்சிக்கொண்டிருந்தாலும் வெளிப்படையான பேச்சிலும், செயலிலும் அந்தக் காலத்துச் சாத்வீக மென்னும் — அப்போதுகூட இவருக்கு அதன் பொருள் நன்ருகப் புரியாது என்று சொல்லிக் கொள்ளுகிருர்கள்—அறத்தையும் இரக்கத்தையும் பின்பற்றுவோராகக் காட்டிக் கொள்ள விரும்புகிருரோ!' என்று மனத்துள் கேட்டுக்கொண்டு 'மன்னிக்கவும்' என்று சொல்ல வாயெடுக்கிருன். அதற்குள்,

"என்ன, யோசனை பெரிதாயிருக்கிறது?" என்று திரும்பவும் கேட்கிருன் கொடுங்கரத்தான்.

"தவருகச் சொல்லிவிட்டேன். பொறுத்துக்கொள்ளுங்கள். இனிமேல் துரை என்று அழைக்கமாட்டேன். எப்போதும் போலவே சமத்துவமான முறையில்......

"டே, டே டே டே! நான் சொல்வதை நீர் புரிந்துகொள்ளவே மாட்டேன் என்கிறீரே! நான் சொன்னது வேறு பொருளில். உள்ளமில்லான் என்று உமக்குப் பெயர் வைத்தவர்கள் மூளையில்லாதவன் என்றுமல்லவா சேர்த்துப் பெயர் வைத்திருக்க வேண்டும்போல் தோன்றுகிறது. நான் சொல்வதை இனிமேலாவது கவனமாகக் கேளும். நன்ருகப் புரிந்துகொள்ளும். நமக்கு அடங்காமல் நம்மை எதிர்த்த காரணத்துக்காகச் சிறைக்குள்ளே தள்ளப்படுகின்ற எதிரிகளைஅடிக்கும்போது சித்திரவதைக் குள்ளாக்கும்போது அவர்கள் அழுகின்ருர்கள் அல்லவா, கதறுகின்ருர்கள் அல்லவா,குய்யோ முறையோ வென்று கூச்சல் போடுகின்ருர்கள் அல்லவா, அவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து நீர் பரவசத்தோடு சிரிக்கின்றீரே 'பின்னும் உரக்க அழுங்களடா, கதறுங்களடா, துடியுங்களடா என்று ஆவேசத்தோடு நீரும் பாய்ந்து, பாய்ந்து அவர்களைத் தடியால் தாக்குகின்றீரே, பூட்சுக் காலால் உதைக்கின்றீரே, அப்போது நீர் உள்ளமில்லாதவராக நடந்துகொள்கிறீர். அந்த வேலையில் உமக்குள்ள திறமை மிகவும் பாராட்டக்கூடியது! பாராட்டுகிறேன்! அதற்காக அந்த வேலையில் உள்ள திறமைமட்டும் இருந்தால் போதுமா?"

திரும்பவும் உள்ளமில்லான் திகைப்போடு பேசாமல் நிற்கிருன். 'நான் சிறைத் தலைவன். இதோ இவர் எனக்குத் தலைவர். இவர் நினைத்தால் இன்றைக்கே என்னை ஒரு சாதாரணச் சேவகனுக்கிவிடலாம்! அல்லது வேலையே இல்லை என்று வெளியே ஓட்டிவிடலாம்! அதேபோல் இவர் நினைத்தால் ஒரே கணத்தில் என்னை மிகப்பெரிய அதிகாரியாகவும் மாற்றிவிடலாம். ஆகவே, இவர் விருப்பப்படி நடந்து கொள்வதே என்னுடைய கடமை. இவருடைய விருப்பமோ, இவருடைய கொடுங்கோலை எதிர்த்து, முட்டாள்தனமான ஆட்சியை எதிர்த்து—அல்லது நிர்வாகத்தை எதிர்த்து — சிறைக்குள்ளே வருகின்ற நல்லிதயக்காரர்களையெல்லாம் கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்க வேண்டும் என்பது! இவருடைய அந்த விருப்பத்தை நான் நிறைவேற்றினுல் இவருடைய சலுகை எனக்குக் கிடைக்கும்! எனவே நான் செய்யவேண்டியது என்ன? இவருடைய விருப்பம்போல் நல்லிதயக்காரர்களையெல்லாம் அடித்து நொறுக்க வேண்டியது தானே! சித்திரவதை செய்யவேண்டியதுதானே! இதைவிட வேறு வேலை என்ன இருக்கிறது எனக்கு?" என்று தனக்குள் திரும்பவும் கேட்டுக்கொள்ளுகிருன்.

"என்ன யோசிக்கிறீர்!ஓ,யோசிக்கக்கூட உமக்குத் தெரியுமா? அதுதானே கேட்டேன்" என்று திரும்பவும் கொடுங்கரத்தான் பேசுகிருன்.

"நான் இப்போது உம்மிடம் சொல்ல வந்ததுகூட அதுதான். அதாவது யோசனை செய்யவேண்டும் என்பதுதான். உமக்கு மூளை இருக்கின்றதல்லவா?" என்று வினவியபடிஉள்ளமில்லாதானை நிமிர்ந்து பார்க்கிருன் கொடுங்கரத்தான்.

திரும்பவும் திகைப்பு ஏற்படுகிறது உள்ளமில்லாதானுக்கு. எனினும் அவன் கூறுகிருன்:

"இதுவரை என் மூளையைப்பற்றி நான் நினைத்தது கிடையாது. அது இருக்கின்றதோ இல்லையோ அதுவும் எனக்குத் தெரியவில்லை.ஆனல் எனக்குக் கை இருக்கிறது. கால் இருக்கிறது. வாய் இருக்கின்றது. இந்தக் கையால் நல்லிதயமுள்ளவர்களை அடிப்பதற்கு வேண்டுமட்டும் முடியும். இந்தக் காலால் நல்லிதயமுள்ளவர்களை உதைப்பதற்கு எவ்வளவு வேண்டுமானுலும் ஆகும். இந்த வாயால் நல்லிதயமுள்ளவர்களைக் கண்டபடி இழித்துப் பழித்து வசவுகள் பாடக் கொஞ்சங்கூடச் சளைக்கவே மாட்டேன்" என்று ஒவ்வொரு உறுப்பையும் தொட்டுத் தொட்டுக் காட்டிக்கொண்டு சொன்ஞன் உள்ளமில்லான்.

"இதுவரை இவற்றைத்தான் உங்கள் ஆணைப்படி பயன்படுத்தி வந்திருக்கிறேன். மூளையைப்பற்றி இப்போதுதான் நீங்கள் கூறுகிறீர்கள்.

மூளை......'' என்று தடுமாறுகிறன் உள்ளமில்லான்.

“உமக்கு மூளை இருக்குமென்று தான் நான் நம்புகிறேன். அந்தமூளை அந்த நல்லிதயக் காரர்களுக்கு இருப்பது போன்றது அல்ல என் பதும் தெரிகிறது. ஏனென்றல்— அப்படியிருந்திருந்தால் இந்நேரம் நீரும் அந்த நல்லிதயக்காரர்களோடு சேர்ந்துகொண்டு சிறைக்குப் போயி ருப்பீர்......''

“நான் தினம் தினம் சிறைக்குப் போய்க்கொண்டுதான் இருக்கி றேன். ஒரு நாள் கூடப்போகாம லிருப்பதில்லே'' என்று உள்ளமில் லான் குறுக்கிட்டுச் சொல்கிறன்.

அந்தக் குறுக்கீட்டு வார்த்தை களைக் கேட்டு கொடுங்கரத்தான் உள்ளுக்குள் சிரித்துக்கொள்கிறன். உள்ளுக்குள் சொல்லிக்கொள் கிறன். 'எவ்வளவு அறிவில்லாத் தனத்தோடு இவன் பதில் கூறு கிறன்! நான் சொல்கின்ற சாமானி யச் செய்தியையே இவனுல் புரிந்து கொள்ள முடியவில்லேயே! இப்படிப் பட்ட ஆட்கள் கிடைத்தது என் பாக்கியமேதான்! சொல்கின்ற அலு வலேத் தவிர வேறு எதையுமே சிந் திக்கத் தெரியாதவர்கள். மனித இயல்பே இல்லாதவர்கள்! இயந் திரத்தைப்போல இயங்கக்கூடியவர் கள்! உண்பது, உறங்குவது, கை நிறையப் பணம் வாங்குவது, அதி காரக் கெடுபிடிபுரிவது இவற்றைத் தவிர வேறு எதையுமே பெரிதாக எண்ணுதவர்கள். மற்றவர்களின் நிலேபற்றி, தன்மைபற்றி உய்த் துணரும் அறிவு இல்லாதவர்கள்— இப்படிப்பட்டவர்கள்தான் எனக்கும் தேவை.'

“நான் சொல்லவந்தது, நீர் உம் முடைய கடமையாற்றச் செல்வது பற்றியல்ல. உம்முடைய மூளை, அந்த நல்லிதயக்காரர்களின் மூளே யைப்போல் ஆய்ந்தறியும் மூளே யாக இருந்திருந்தால் இந்நேரம் நீர் என்னுடைய இந்தச் செயல்களே யெல்லாம் பார்த்துச் சும்மா இருந்தி ருக்கமாட்டீர்! என்னேயே எதிர்த் துப் பேசியிருப்பீர்! நியாயம், மனச் சான்று என்று எனக்குத் தெரியாத —நான் வெறுக்கின்ற செய்திகளே எடுத்து அந்த நல்லிதயக்காரர்கள் சொல்லிக்கொண்டிருப்பதுபோல நீரும் சொல்லுவதற்கு முன் வந்தி ருப்பீர்! பிறகு உம்மை நான் கடிந்து பேசியிருப்பேன். உமக்கு மாறுதல் உத்தரவு கொடுத்து வேறு ஊருக்கு மாற்றிவிட்டிருப்பேன். பின்னும் நீர் வயிறெரிந்து, மனம்பதறி வேறு ஏதையாவது சொல்லிவிடுவீர். உடனே நான் உமக்கு பதவி இறக் கமே தந்திருப்பேன்......''

“ஐயயோ அப்படியெல்லாம் மாற் றல் உத்தரவோ பதவி இறக்கமோ செய்துவிடாதீர்கள்! இனிமேல் சிறைக்குள் வருகின்ற நல்லிதயக் காரர்களே நாள் ஒன்றுக்குப் பத்துப் பேராகத் தனியாக ஒதுக்கி எடுத் துக்கொண்டு அவர்களேக் கட்டாரி எடுத்துக்கொண்டு துண்டு துண் டாக வெட்டி வெட்டிச் சித்திரவதை செய்து கொன்று தீர்க்கச் சொன் னுலும் கொன்று தீர்க்கிறேன்'' என்று கெஞ்சுகின்றன் உள்ளமில் லான்.

“அடடே நான் சொல்வதை முழுதுமாகக் கேளும் ஐயா! நாட்டி லுள்ள எல்லாருக்காகவும் பேசி நம்மை எதிர்த்துக்கொண்டு உதை பட்டு வதைபடுகின்றர்களே, அந்த நல்லிதயக்காரர்கள், அவர்களு டைய மூளையைப்போல் உம் மூளே யும் நேரிய மூளேயாயிருந்தால் அப் படி நடந்திருக்கும் என்று சொல்ல வந்தேன்......''

“இல்லீங்க, இல்லீங்க! ஒரு கால மும் என்னுடைய மூளே அந்தமாதிரி நல்லிதயக்காரர்களின் மூளேபோலி ருக்காதுங்க. வேண்டுமானுல் நீங் கள் என் மண்டையை உடைத்துச் சோதனேபோட்டுப் பாருங்கள். அதோடு ஒரு காலத்திலும் என் மூளேயை அந்தமாதிரி மாற்றிக் கொள்ளச் சம்மதிக்கமாட்டே னுங்க.''

“சரி, அந்த உறுதி ஒன்றே போதும்! உம்மை நான் முழுக்க முழுக்க நம்புகிறேன். இப்போது நீர் உம்முடைய மூளேயை நான் சொல் வதுபோல் பயன்படுத்தவேண்டும். அதாவது என்னேத் துரை என்று நீர் அழைத்தீரே அந்தமாதிரி வார்த்தைகளே நான் தனிமையாக இருக்கின்றபோது நீர் சொல்லக் கூடாது. அந்த வார்த்தை என்னு டைய உயர்ந்த நிலேக்கு மிகவும் மட்டமான வார்த்தை.''

“இல்லேயே அந்தவார்த்தை நல்ல வார்த்தையாயிற்றே! சிறையிலே இருக்கிற கொலேயாளி முதல் அத் தனேபேரும் என்னேத் துரையென்று தானே அழைக்கின்றர்கள்!''

“அட என்னய்யா! உம்மை அந்த வார்த்தையைக்கொண்டு அழைக் கலாம். அது உம்முடைய தகுதிக்கு ஏற்றது. உம் நிலேயும் என் நிலேயும் ஒரே நிலேயா! நீரும் துரை! நானும் துரையா என்ன? சிந்தித்துப்பாரும் ஐயா! உம்மைக் குறிப்பிடும் அதே வார்த்தையைக்கொண்டு என்னே யும் குறிப்பிடலாமா என்ன? இனி என்னேத் துரை என்று அழைக் காதீர்! தெரிகின்றதா?''

“வேறு என்ன வார்த்தையால் உங்களே......''

“அட, இதைக்கூடவா நான் சொல்லித்தரவேண்டும்! என் கால் களேச் சுற்றிக்கொண்டு கிடப்பவர் கள், என் 'சீட்டா'க்களேப்போல என்னேக் கண்டதும் வாலேயாட்டு பவர்கள் எல்லாம் என்னே எப்படி அழைக்கின்றர்கள் என்று தெரி யாதா''?

“யார் அவர்கள் வாலேயாட்டும் சீட்டாக்கள்?''

“அவர்கள்தானய்யா என்னுல் அமைச்சர் என்ற பெயரைப்பெற்று விட்டவர்கள். அவர்கள்கூட என் கடைக்கண் பார்வை விழுகின்ற வரை உம்மைப்போல் மூளேயிருப் பதையே தெரிந்துகொள்ளாமல் தான் இருந்தார்கள். நான்தான் அவர்களுக்கு மூளே இருப்பதை எடுத்துச் சொன்னேன். அதோடு அந்த மூளேக்கும் உள்ளத்துக்கும் தொடர்பு இல்லாமல் எப்படி நடந்து கொள்வது என்பதையும் சொல்லிக் கொடுத்தேன். என்னுடையதைப் போல் உங்கள் மூளே சூழ்ச்சிக்குப் பயன்பட்டு வரும்வரைதான் நான் உங்களே என் காலே நக்கும் வாலன் களாக வைத்துக்கொண்டிருப்பேன். நீங்களும் அதுவரைதான் அமைச்சு நாற்காலியில் ஒட்டிக்கொண்டு கிடக்கமுடியும்' என்றும் எச்சரித் தும்விட்டிருக்கிறேன். அவர்கள் எல் லாம் என்னே எப்படி அழைக்கின் றர்கள் தெரியுமா?''

“தெரியாதே! எப்படி அழைக்கின் றர்கள்?''

4. ஆண்டவன்.

“நீர் வெளியே போவதேகிடை யாதா? அட என்னய்யா நீர்! உம் சிறைக்குள்ளேயிருக்கும் கொலே யாளிகளிடம் நீர் அதிகாரம் செலுத் திக்கொண்டு உள்ளேயேதான் அடைபட்டுக்கொண்டு கிடப்பீரா?—

நல்லது, நல்லது! அதுவும் என்க்கு ஒருவகையில் நல்லதுதான். அது போகட்டும். அந்த வாலன்கள் என்னை எப்படி அழைக்கின்கிர்கள் தெரியுமா? ஆண்டவன் என்று அழைக்கின்றார்கள் ஐயா, ஆண்டவன் என்று.''

''ஓ, ஆண்டவன் என்று! சரி சரி, இனிமேல் உங்களை நானும் அப்படியே அழைக்கின்றேன் ஆண்டவனே!''

''அப்படிச் சொல்லும்! அப்படிச் சொல்லும்!—சரி, இப்போது நான் உம்மை எதற்கழைத்தேன் தெரியுமா? — அந்த நல்லிதயக்காரப் பயல்கள் இருக்கின்றார்கள் பாரும், அவர்களுக்கு நீர் கொடுத்துக் கொண்டிருக்கும் தொல்லை, படுத்துகின்றபாடு, செய்கின்ற சித்திரவதை போதாது. இன்னும் அதிகப் படவேண்டும்! அவர்கள்மீது ஏவிவிட்டு, அவர்களை அடித்து, உதைத்துச் சித்திரவதை படுத்தப் பயன் படுத்துகின்றீர்களே கொலையாளிகள் அவர்களுக்குச் சும்மா சோறு மட்டும் போட்டுக்கொண்டுவந்தால் போதாது. வேறு என்ன என்ன கேட்கின்றார்களோ அவ்வளவும் கொண்டுவந்து கொடுக்க வேண்டும்.''

''அப்படித்தான் செய்கின்றேன் ஆண்டவனே. நீங்கள் ஏற்கனவே உத்தரவு போட்டபடிதான் ஒவ்வொன்றையும் செய்துகொண்டு வருகிறோம். தினம் ஒன்றுக்கு வெளியிலிருந்து கொண்டுவரும் கள்ள மது மட்டும் நூறு குடங்களுக்கு மேல்! அவற்றில் முக்கால் பகுதியை அந்தக் கொலையாளிகளே குடித்துத் தீர்க்கிறார்கள்!''

''அதோடு இன்னொரு செய்தி. சிறைக்குள் நடக்கின்ற எந்த நிகழ்ச்சியும் வெளியே வந்துவிடக்கூடாது. எவனாவது வந்து உம்மைப் பேட்டி காண வேண்டுமென்று கேட்டால் பேட்டி கொடுக்கக்கூடாது. கண்டிப்பாகச் சிறைச் செய்தியைப் பற்றி எவனுடனும் நீர் பேச்சுக் கொடுக்கக் கூடாது! அடித்துச் சொல்லிவிடும் எவனையும் பேட்டி பார்க்கமுடியாது என்று. ஏனென்றால் நீர் தத்துப்பித்தென்று எதையாவது உளறி வைத்துவிட்டால் என் அதிகாரம் பறிபோவதற்கு முன்னே நாட்டு மக்கள் என்னை உயிரோடு புதைத்து விடுவார்கள்.

அதோடு இன்னுமொரு செய்தி: உள்ளே இருக்கின்ற நல்லிதயக்காரர்களைச் சும்மா அடித்து உதைத்துச் சித்திரவதைப் படுத்தினால் மட்டும் போதாது. வஞ்சகமாகப் பேசக்கூடிய நாலைந்து பேர்களைத் தயார் செய்து அவர்களிடம் பேச விட வேண்டும். அந்தப் பேச்சு எப்படியிருக்கவேண்டும் தெரியுமா? ஒரு வார்த்தைகூட உண்மை என்பது இருக்கக்கூடாது! ஆனால், நிறையக் கனிவு இருக்க வேண்டும். ஏமாற்று வித்தைகள் இருக்கவேண்டும். வெளியே மக்கள் எப்படிக் கொதிக்கின்றார்களோ அதை அப்படியே மாற்றிச் சொல்லவேண்டும்! இந்த நல்லிதயக்காரர்களைப்பற்றி எப்படி எப்படியெல்லாம் தூற்றிக் காட்ட முடியுமோ, அப்படி அப்படியெல்லாம் தூற்றிக்காட்டவேண்டும். அவர்களுக்கு நல்லது சொல்வது போலவே, அவர்களை ஆதரிப்பது போலவே சொற்களையமைத்து வேண்டியமட்டும் அவர்களைத் தூற்றி இறக்கித் தீர்க்கவேண்டும்.''

''அந்த வித்தையில் எனக்குக் கொஞ்சங்கூடப் பயிற்சி கிடையாதே! இதுவரை உங்கள் மேலான தலைமையின்கீழ் சிறைக்கு வருகின்றவர்களை அடிக்கவும், உதைக்கவும் விதவிதமான சித்திரவதைகள் புரியவும்தான் பழகியிருக்கிறேன். மறைமுகமாக இழித்துப் பழித்துப் பேசுவதோ நயவஞ்சகமாகப் பேசுவதோ எனக்குத் தெரியாததாயிற்றே!''

''நீரே நேரடியாகப் பேசவேண்டாமய்யா! அதற்கெனத் தனியாட்கள் இருக்கின்றார்கள். அவர்களை வைத்துக்கொண்டு பேசவிடும்! இதோ பாரும். எடுத்துக்காட்டுக்குச் சொல்லுகிறேன் அந்தப் பேச்சு எப்படி இருக்கவேண்டுமென்று:

'மாளிகையில் வாழ்கின்ற இந்த நல்லிதயக்காரர்களைச் சிறையிலே கொண்டுபோய் அடைத்துப்போட்டுப் பலவகை வசதிக் குறைவுகளை உண்டாக்குகின்றார்களாமே?'

'அந்த நல்லிதயக்காரர்களுக்கு நீங்கள் அதிகத் துன்பம் கொடுக்கின்றீர்களாம்! அதுபற்றிக் கேள்வி கேட்க நான் விரும்புகின்றேன். இந்தச் சமயம் சிறைப்படாத நல்லிதயக்காரர்கள் என்னோடு இங்கு சேர்ந்து நின்று கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும். பாவம் அவர்கள் வெளியில் சுற்றிக்கொண்டு திரிகிறார்கள்!'

''இந்த மாதிரி அந்த நல்லிதயக்காரர்களுக்குச் சாதகமாகப் பேசுவதுபோல் நடிப்புக்காட்டி, அவர்களை இழித்துப் பழித்துப் பேச வேண்டும். வஞ்சகம் வெளிப்பட்டு விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

''அடே அப்பா! இவை எல்லாம் வஞ்சக வார்த்தைகளா? இப்படிப் பேசக்கூடிய நயவஞ்சகத்தின்

எலும்பு நொறுக்கப்பட்ட எண்ணருந் தோழர்களே,

★ தழும்பேற்றுக் கொண்ட தம்பியரே!

கொடுமை புரிவோர் கொற்றத்தில்!

கண்ணியன்-அண்ணன்-தோழர்கள் சிறையில்!

★ தர்மமா? தகுமா? நாடு கேட்கிறது!

நெஞ்சேரிய வஞ்சகம் செய்தோரிடம்—

நீதி கேட்டு வெளி வருகிறான்....

''தலைவன்''

தி. மு. கழக வார ஏடு ★ ஆசிரியர்: தினகரன்

விவரங்களுக்கு:

31, பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு, சென்னை-6.

அப்பன்மார் இந்த நாட்டிலே இருக்கும்போது, அவர்கள் நல்ல சமயத்தில் உங்களுக்குத் தொண்டுழியம் புரியக், கைகொடுத்து உதவச் சித்தமாயிருக்கும்போது உங்கள் ஆட்சியின் சுண்டுவிரலைக்கூட அந்த நல்லிதயக்காரர்களால் மடக்கமுடியாது ஆண்டவனே, மடக்கமுடியாது!''

"பலே பலே அப்படிச் சொல்! எது எப்படிப்போனாலும் நாம் இப்போது நடத்துகின்ற இந்த அடக்கு முறை வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு, நான் அடுத்துச் செய்யப் போகும் முதல் வேலை என்ன தெரியுமா?''

"என்ன ஆண்டவனே?''

"மயக்கம் போட்டு விழுந்துவிடாதீர்! உண்மையா அல்லவா என்று ஐயமும் கொண்டு விடாதீர்!—இந்த இராச்சியத்திலேயே ஒரு மேலான பதவியை உமக்கு அளிக்கப் போகிறேன். அதுதான் என் முதல் வேலை!''

"உண்மையாகவா ஆண்டவனே? என்னால் பேச முடியவில்லை ஆண்டவனே! எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி! — ஆமாம் ஆண்டவனே! இவ்வளவு பாடும் அதற்குத்தான் ஆண்டவனே! பெல்சன் காம்ப் என்று ஒரு சித்திரவதைக் கூடம் ஐரோப்பாவில் இருந்ததே, அதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா ஆண்டவனே? பாவம் உங்களுக்கு எங்கே அதெல்லாம் தெரியப் போகிறது!.........!''

"டேய்'''

திடீரென்று ஒரு அதட்டல் போடுகிறான் கொடுங்கரத்தான்.

"என்ன ஆண்டவனே மிகவும் மட்டமான மரியாதைக் குறைவான வார்த்தையால் என்னை அழைக்கிறீர்கள்!''

"ஓ, ஓ! நீரா! நான் மறந்தே போய்விட்டேன்! எனக்கு ஆத்திரம் வந்தால் இப்படித் தான் யாரையும் வாடா போடா என்று பேசுவது வழக்கம்.

ஏன் இப்போது நான் ஆத்திரப்பட்டேன் என்று கேட்கின்றீரா? இட்லர் காலத்தில் ஐரோப்பாவில் நடந்த அட்டூழியங்கள் எல்லாம் எனக்குத் தலைகீழ்ப் பாடம். படிக்கத் தெரியாது என்று நினைத்துவிடாதீர்! உம்மைப்போல் படித்தவர்களில் எத்தனையோ பேர் எனக்குக் கையாளாக இல்லையா! நான் எடுத்தெறியும் எலுபுத் துண்டுக்காகக் காத்துக் கிடக்கவில்லையா! அந்த மாதிரி ஒரு ஆளை வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் படித்துக் காட்டச் சொல்லி நான் நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறேன்! இப்படி நான் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பதை நீர் உமக்குத் தெரியுமா என்று கேட்டால் எனக்குக் கோபம் வருமா, வராதா?''

"ஆண்டவனே, ஆண்டவனே!''

"என்ன?''

"இது மாதிரி கையாள், எடுத்தெறியும் எலும்புத் துண்டுக்குக் காத்துக் கிடப்பவன் என்றெல்லாம் என் மாதிரி உங்களுக்குத் துணை நிற்கிற ஆட்களையெல்லாம் இழிவாய் நினைத்துப் பேசுகிறீர்களே, இது தர்மமா?''

"தர்மமா! நியாயமா!—உங்கள் இலட்சணத்தில் இது வேறேயா! ஏய்யா! நான் கடித்தெறியும் எலும்புத் துண்டை நீர் எடுத்துக் கடிக்கலாம்! ஆனால் அதைச் சொல்லி விட்டால் உமக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வருகின்றதோ! பின்னே எதற்காக நீர் எல்லாம் என்னைச் சுற்றி வருகின்றீர்? எதற்காக நான் எள் என்பதற்கு முன் எண்ணெயாய் வந்து நிற்கிறீர்? எதற்காக நான் நல்லிதயக்காரர்களை 'அடி' என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், அவர்களைக் கீழே பிடித்துத் தள்ளி அடி அடி என்று அடித்து மூர்ச்சை போட்டு விழச் செய்கிறீர்கள்? எல்லாம் நான் சும்மா மகிழவேண்டும் என்பதற்காக மட்டுந்தானா? நான் மகிழ வேண்டும். அதன் மூலம் உம்மைப் போன்றவர்களுக்கெல்லாம் புதிய பதவியோ, பதவி உயர்வோ கிடைக்கும் என்ற நப்பாசையில் தானே! உள்ளதைச் சொன்னால் ஏன் உடம்பெல்லாம் உங்களுக்கு எரிகிறது?''

"என்ன இருந்தாலும் இப்படிப் பச்சையாகச் சொன்னால் எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பது?''

"என்ன! பொறுத்துக் கொண்டிருப்பதா? வாய் நீளம் காட்டுகின்றீரே!''

திரும்பவும் அதட்டும் குரலிற் பேசுகிறான் கொடுங்கரத்தான்!

"இல்லை, இல்லை ஆண்டவனே! மன்னித்துக் கொள்ளுங்கள்! நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கூறிக் கொள்ளுங்கள்! எனக்கு நீங்கள் சொன்னீர்களே அந்தப் புதிய பதவி அதைக் கொடுத்தால் போதும்!''

"அப்படி வாரும் வழிக்கு!—அது போகட்டும். நான் சொன்னது நினைவிருக்கிறதா? அந்த நயவஞ்சகப் பேச்சு! மறந்து விடாதீர் அதை! அதோடு அந்தப் பரணன் இருக்கின்றானே, அவனை எவ்வாறாவது நாம் சொல்வதை நம்பும்படி செய்ய வேண்டும்!''

"ஐயோ, பரணனையா சொல்கின்றீர்கள்! அவர் பக்கத்தில் நெருங்கக் கூட எனக்குப் பயமாக இருக்கிறதே!''

"என்னய்யா! இப்போதுதான் சொன்னீர் பெல்சன் காம்ப் அது இது என்று! பரணன் என்று சொன்னதும் பதறுகின்றீரே!''

"பதறுவது ஒன்றும் கிடையாது ஆண்டவனே! அந்தப் பரணனிடம் ஒரு வார்த்தை பேச முடியவில்லை. நான் பேச வாயெடுப்பதற்கு முன்னரே நான் என்ன பேசப் போகிறேன் என்பதை அவர் முன் கூட்டியே சொல்லிவிடுகிறார்! அதற்குத் தக்க பதிலும் அப்போதே வெளியிட்டு விடுகிறார். நான் என்ன செய்வது? இத்தனைக்கும் நீங்கள் சொன்னபடியேதான் அவரை நிலவறைக்குள்ளே கொண்டுபோய்ச் சிறை வைத்திருக்கிறேன். இரவும், பகலும் அங்கே என்னவோ ஒன்றாகத்தான் இருக்கின்றது. என்றாலும் அவரை என்னால் ஏமாற்றவே முடியவில்லையே!''

"என்னதான் அவன் சொல்கிறான்?''

"அவர் சொன்னது அவ்வளவையும் என்னால் நினைவு வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவர் நேற்றுச் சொன்னதை மட்டும் சொல்கிறேன்:

(அடுத்த இதழில்)

திராவிட நாடு

திராவிட நாடு என்பது ஒருவர் கொடுப்பதுமன்று; மற்றொருவர் வாங்குவதுமன்று. அது பன்னெடுங்காலத்துக்கு முன் இருந்து ஆட்சி செலுத்திச் செம்மைகண்டது. வீரத்தின்மேல் வீற்றிருந்து, அறத்தின்பால் அமர்ந்து, நீதியின்பால் வதிந்து மக்களின்மீது எக்காலத்தும் அன்புகொண்டு ஒழுகிய உயர் நாடு. ஒப்பற்ற திருநாடு. இல்லையென்னாது வாரி வழங்கும் வள்ளல்களையும், சொல்லையே விலையில்லாக் கவியாகக் கொள்ளும் புலவர்களையும் தன் அகத்தே கொண்டது. முடியுடை மூவேந்தர்களையும், மூடு பனி இமயத்தின் உச்சியிலே தனக் கீடில்லையென ஆடிப் பாடிக் காட்டும் கயல், வில், புலிக்கொடிகளையும் பெருமையாகக் கொண்டிது.

எனவே, இப்படிப்பட்ட வள நாட்டை திராவிடம் என்று கொண்டதேன்? என்பதை நோக்குவோம்: பொதுவாக தமிழ்மொழியை உள்ளிட்ட மொழிகள் பலவும் 'திராவிடம்' என்றே கொள்ளப்பட்டுள்ளன. திராவிடம் என்னும் சொல்லுக்கு நேர் பொருள் தமிழ் என்பது. இச்சொல் தமிழர் அல்லது திராவிடர் வாழ்ந்த நாட்டையும், அவர்கள் பேசிய மொழியையும் ஒன்றாகக் குறிப்பதாகும். சீன யாத்திரிகர் ஹியூன்-சியாங் என்பவர், ட்சி-மோ-லோ என்று குறித்துள்ளது தமிழ் என்ற சொல்லையேதான். வடமொழியில் தென்னிந்திய மொழியினத்தைப் பண்டை நாளில். 'ஆந்திர-திராவிட பாஷா' என்று குறித்துள்ளார்கள். 'தெலுங்கு-தமிழ்' என்பதே அதன் பொருள். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சிறந்த வடமொழி வாணரான குமாரில பட்டர் என்பவர் இதை முதன் முதலாக எடுத்தாண்டுள்ளார்.

மனுஸ்மிருதியில் பத்தாவது பிரிவில் ஆரியத்திலிருந்து வழுவி, பார்ப்பனர்களுடன் சகவாசமிழந்து சாதிப் பிரஷ்டர்களான க்ஷத்திரியக் குடிகளை, பௌண்ட்ரகர், ஒட்ரர், திராவிடர், காம்போஜர், யவனர், சாகர், பாரதர், பஹ்லவர், சீனர், கிராதர், தரதர், கசர் என்று கூறப்பட்டிருக்கிறது. மற்றும் மனுஸ்மிருதியில் திராவிடம் என்ற சொல் தென்னிந்திய மக்களனைவரையுங் குறித்து நிற்கின்றது. தவிரவும், சத்திய விரதர் என்ற இந்தியப் பெருமூதாதையரைப் பாகவத புராணம்,

கலையழகன்

'திராவிட மன்னர்' என்றே சாற்றியிருக்கின்றது. இந்தியப் பாகத மொழிகளை வகைப்படுத்தி இனம் பிரித்த பண்டையராச்சியாளர் மூல பாகதங்கள் மூன்றென்றும், அவை, மகராஷ்ட்ரி, சௌரசேனி, மாகதி என்றும் பிரித்துள்ளனர். இம்மூல பாகதங்களுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்பட்ட பாகத மொழி வரிசையில், 'திராவிடி' என்னும் பெயரால் திராவிடம் சேர்க்கப்பட்டுள்ளது. வடமொழி நூல்களைத் தொகுத்து ஆங்கிலத்தில் வெளியிட்ட ஜேமூர் என்னும் பேராசிரியர் 'சமஸ்கிருத மூலங்கள்' என்ற நூலில் மேற்கோள் ஒன்றில் 'திராவிடி' என்று காட்டியுள்ளார். பின்னும் இந்தி மொழி நூலறிஞரான பாபு இராசேந்திரலால் மித்ரா என்பவர், 1854-ஆம் ஆண்டில், திராவிடி என்பது மூல பாகதங்களில் ஒன்றேயென்றும், சௌரசேனியுடன் அது ஒருங்கு சேர்த்து எண்ணற்குரியதென்றும், அது சௌர சேனியைப் போன்றே பிறபல உண்ணாட்டு மொழிகளுக்குத் தாய்மொழியென்றும் நன்றாக எடுத்துக் கூறியுள்ளார். வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூரும் தம் தேசிய வாழ்த்துப் பாடலில், 'திராவிட உத்கல வங்கா' என்று கூறி வாழ்த்துக்குரிய நாடுகளில் திராவிட நாட்டைச் சேர்த்துள்ளார். மேலே கூறிய ஆதாரங்களிலிருந்து, 'திராவிடமும், திராவிட நாடும்' நன்கு புலனாவது தெரியாமல் போகாது.

மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்டதாய், பழவேற்காடுமுதல் குமரி முனை வரையில் விரிந்து கிடக்கும் பெரு நிலப் பகுதியாகிய கருநாடகம், தென் திருவாங்கூர்ப் பகுதியில் குமரி முனை தொடங்கித் திருவனந்தபுரம் வரை; ஈழத்தின் வடமேற்குப் பகுதி ஆகிய இடங்களிலும், கொழும்பில் பொருள் திரட்டும் வணிகர்களில் பெரும்பான்மையோர் தமிழர்களாய் இருப்பதால் அவையும், பெகு, பினாங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளில் காணப்படும் கலிங்கர்களில் பெரும்பாலோர் தமிழர்களாய் இருப்பதால் அவையும், மோரீசுக்கும் மேலை இந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென்றுள்ள கூலி மக்களில் அதிகப்படியோர் தமிழர்களாய் இருப்பதால் அவையும், திராவிட மொழியான தமிழ் பேசப்படும் இடங்களாகக் கொள்ளலாம்.

தமிழ் என்னும்போதே தண்ணமுது ஊறும் வாயில் என்றார் கூத்தர்

னந்த பாரதியார். இவள் — என்று பிறந்தவள் என்றுணராத இயல்பின ளாம் எங்கள் தாய். யாமறிந்த மொழிகளிலே தமிழைப்போல் இனி தாவது யாங்கணுமே கண்டதில்லை என்று பாடினர் பாரதியார். மூப்பு இல்லாதவள். கலைகள் பல ஈன்றும், விலையிதற்குண்டோ வெனும் கன்னி யழகு அழியாதவள். நாகரிக உல கில் அகரமுடையவள். மொழிகள் பல செத்தும் தான் சாகாத வாழ் நாட்கள் பல கொண்டு அந்த நாள் தொட்டு இந்த நாள் வரையிலும் இருப்பவள். இன்னும் வாழ்ந்து கொண்டே இருப்பவள்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகம் என்று தொல்காப்பியமும், குண கடல் குமரி குடகம் வேங்கடம், எனும் நான் கெல்லையின் இருந் தமிழ் என்று நன்னூலும், வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும், தெனு அது கெழு குமரியின் தெற்கும், குணு அது கரைபொரு தொடுகடற் குணக்கும், குடாஅது தொன்று முதிர் பௌவம். தென் குமரி வட பெருங்கல், குணகுடகட லாயெல்லை என்று புறநானூறும், வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு. நெடி யோன் குன்றமுந் தொடியோள் பௌவமும், தமிழ் வரம்பறுத்த தண் புனல் நன்னாடு என்று சிலப்பதி காரமும், கருவூரின் கிழக்கு, மரு வூரின் மேற்கு, மருதையாற்றின் தெற்கு, வைகையின் வடக்குஎன்று செந்தமிழ் நாட்டின் எல்லையைக் குறிப்பிட்ட நச்சினர் கினியாரும், தமிழ்நாடாகிய திராவிட நாட்டின் எல்லையை வகுத்து ஓதுகின்றனர்.

தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும் கண்மணி குளிர்ப்பக் கண்டேன், என்று அன்னியநாட் டான் ஒருவன் தமிழனுடைய ஆட்சி முறைமையை வாயாரப் புகழ்ந்துள் ளான் என்பதை நினைக்குந்தோறும் படிக்குந்தோறும் நம்மையுமறியா மலே நம்மிடையே மட்டில்லா மகிழ்ச்சியூற்றுப் பெருக்கெடுத்து ஓடுகிறது. கொடை அளி செங் கோல் குடியோம்பல் நான்கும், உடையானும் வேந்தர்க்(கு) ஒளி என்று வள்ளுவர் கூறிய கல்வி, அறிவு, ஒழுக்கம், வீரம் முதலிய வற்றிலும், அதே மறையரசர் வள் ளுவனர் நாட்டைப்பற்றி, நாடு என்ப நடாஅ வளத்தன நாடு அல்ல, நாட வளம்தருநாடு என்று அருளி யுள்ள நாட்டிலக் கணப்படியும் திரா விட மன்னர்கள் தலைசிறந்து விளங் கினர்கள் என்பதை புறநானூறு வாயிலாக அறியலாம். எதையும் எடுத்துக்காட்டோடு கூறுவது ஒரு வன் கூறப்போகும் செய்திக்குப் பலம் என்பது வழக்கு.

அதற்குக் கிள்ளிவளவனை இங்கே கொள்வோம். அதன் சோணுட்டை ஆண்டுவந்த அரசர்களில் ஒருவன், வேந்தர்க்குரிய மேற்கூறிய இயல்பு களில் சிறந்தவன். அவன் நாடு, ஒரு சிறிய பெண்யானை படுத்தற் குரிய மிகச் சிறிய நிலத்தில் நெல் விளைந்தால் அங்நெல் பருத்த ஏழு ஆண் யானைகளை ஊட்டிக் காக்கு மாம்! இதனை, ஒருபிடி படியும் சீறி டம் ஏழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே! என்று புறநானூறு 40-ஆம் பாடல் தெரிவிக்கின்றது. அவனது வீரத்தைச் சிலேடையாகக் கொடை யிலேயேற்றிப் புகழ்ந்து பாடிய புல வர், பாடல் ஒன்றின் கருத்து பின் வருமாறு:

பரந்த படைகளையுடைய பெரு வேந்தே! நீ, சினந்து நோக்குமிடம் தீ எழும்; நயந்து நோக்குமிடம் பொன்விளையும். சூரியனிடத்தில் நிலவு தோற்றுவிப்பாய். நிலவில் வெயிலை வருவிப்பாய். இவ்வாறு வேண்டிய பொருளை வேண்டும் போது உண்டாக்கும் ஆற்றல் படைத்துள்ளாய். இதனையும் புற நானூற்றில் அறியலாம். இவை போன்று சுவைக்க இன்னும் எத் தனையோ. ஆனல், பதம்பார்க்க, பானை சோற்றுக்கு ஒரு சோறு போதுமன்றோ?

தமிழர் வீரம், தமிழர்நாடு, தமிழர் ஆட்சிமுறை, தமிழ்மொழி வரலாறு என்று தமிழர்களைப்பற்றி நூலேடு கள் பெயர்கொண்டு இருப்பது, வரு வது ஆண்ட ஓரினத்தின் அரும் பெரும் திறனைக் காட்டுகிறது. அப் படிப்பட்ட ஒருநாடு, ஓர் இனம் உணர்வற்றுக்கிடப்பதை உணர்த்தி யெழுப்புகிறது. மேன்மேலும் ஆராய்ச்சிக்குரிய மொழிவழி நாடா கவே இன்றும் அந்நாடு இருந்து வருவது அதற்கோர் நவிற்சியணி யாகும். அத்தகைய, முப்பக்கக் கட லும் எப்பக்க வளப்பமும் கொண்ட சத்தான இன்பநாடு எங்கே? எங்கே?......சரித்திரம் சொல்லும் நெறித்திறங்கொண்டநாடு எங்கே? பொருதடக்கை வாள் எங்கே? மணி மார்பெங்கே? போர்முகத்தில் எவ வரினும் புறங்கொடாத பருத்த தோள் எங்கே? எங்கே?...இன்று எங்கே? என்று கேட்போமாயின் பெயரளவில் இருக்கின்றது; ஏடள வில் எழுதியிருக்கின்றது என் பதைத்தான் அறிய முடிகிறது. அதுகூடச் சிலருக்குப் புரியாமலும் தெரியாமலும் இருக்கின்றது! விங் தையினும் விந்தையே தாயின் பெயர் தெரியாதிருப்பது!!

விண்ணை இடிக்கும் தலை இமயம் எனும் — வெற்பையிடிக்கும் திற லுடையார்-சமர்,-பண்ணிக் கலிங் கத் திறங்கொடுத்த திகழ்ப்-பார்த்தி பர் நின்ற தமிழ்நாடு என்று பாரதி யார் முழக்கினநாடு. செங்நாப் புல வர் பலர் தோன்றி எங்நாளும் பாடிய நாடு. ஒப்பில்லா மன்னர்கள் எப் போதும் தப்பில்லாமல் ஆண்டநாடு. ஏத்துதலும் போற்றுதலும் உடைய நாடு. பழம்பெரு வரலாறுகள் பட்ட வர்த்தமாகப் பறைசாற்றும் பூர்வீக நாடு.

திராவிடர் தீரர், வீரர், தேசபக்தர்! எங்நாட்டவரும் வியக்கத்தக்க நுண் ணறிவு வாய்ந்தவர். செங்கோ லோச்சுவதில் தனிச் சிறப்புப் பெற் றவர். மக்களுக்காக அரசு; அரசு செம்மையாக நடந்துவர மன்னன் என்ற தத்துவமுடையவர். அறி வாளிகள் நிரம்பிய இடம் தென்னுடு! வற்ருத நதிகளைக்கொண்டு செல் வங்கொழிக்கும் பொன்னுடு. எல் லாக்கலைகளும் கொஞ்சி விளையா டும் பூக்காடு! அன்புக்குப் பிறப் பிடம்! கந்தர்வபுரியின் இருப்பிடம்! எனவே, இப்படிப்பட்ட திராவிடநாடு வேண்டுவதின் அவசியம் ஆச்சரிய மில்லையே!

பிறப்பு

வேலூரில் அண்ணு அவர்க ளுடன் 10 வார கடுங்காவல் தண் டனை பெற்று வேலூர் மத்திய சிறை யில் இருக்கும், M. S. வெங்கடாசலம் M. A. அவர்கட்கு கீரம்பூரில் ஒரு ஆண் குழந்தை பிறந்து இருக்கிறது. தாயும் (கௌசல்யா அம்மையார்) சேயும் நலம்.

"யாருக்குப் பைத்தியம்?"

முதலின் எல்லை...ஆம்! முடிவின் துவக்கம்! அந்த முடிவின் துவக்கத்தைத் துயரத்துடன் முகம் சிவக்க, மலை மாதாவின் மடியில் முகம் புதைத்து, நோக்கும் ஆதவன்! அந்தச் சிவப்புக் கோளத்தின் வண்ணத்தைப் பிரதிபலிக்கும் வானம், காதலனின் அன்பு முத்தம் பெற்ற காதலியின் கன்னத்தை நினைவூட்டியது. ஆனால், அதன் மறு பிறப்பாய், வரண்ட நெஞ்சத்துடன், வாய் உலர்ந்து, அதன் வழியாய் வயிறு வாடி, பசி உணர்வு தாளாமல் மனம் ஓலமிட, நீர் வழியச் சிவக்கும் கண்களையும்தான் நினைவூட்டுகிறது! 'குறையை ஒதுக்கி, நிறைவைக் காண்!' என்று கூறும் பெரியவர்களின் வார்த்தையை மெய்ப்பிக்கத்தானே என்னவோ, வாடும் ஏழைக்கு வகை செய்யாது, வாழும் பணப் பேய்களுக்கு வழி செய்கிறது அரசு......?

நடப்பை அலசும் உள்ளத்துடன், ஆற்றங்கரை சென்று அமர்ந்த என் மனம் ஏனோ ஒரு நீள் அமைதி பெற்றது — அலைவீசும் கடல் திடீரென்று அமைதி அடைந்ததுபோல்!

கதவின் பின் நின்று, தன் கோல முகம் காட்டும் மங்கையைப்போல், நீலமலைத் தொடரின் பின் மறைந்து, பொன்னென ஒளி இறைத்து நிற்கும் மாலை இளம் பரிதியின் அந்த ஒளிக் கீற்றுகள் பொன் துளிகளென, ஆற்று நீரில் மின்னவும், பரணி பாடும் பறவை இனங்களின் ஓலத்தில் இசைகூட்டி வெட்கிச் சிரிக்கும் பெண்ணென, களுக்! களுக்! என இசைகூட்டி நுரை ஒதுக்கித் திரும்பும் அலைகளும், தாலாட்டும் குழந்தையென, ஓரத்தில் ஒதுங்கிவிட்ட துரும்புகளின் அசைவும், ஆறுதலும், அமைதியும் அளிக்காமலா போகும்!

ஆனால், அதோ......சீறி ஓடும் ஆற்றை நோக்கிச் சிரித்து ஓடும் பெண் ஒருத்தி......அவளைப் பிடிக்க முடியாமல் பதட்டத்துடன் ஓடி வரும் வயதானவர்! பார்த்துக் கொண்டிருக்க நானென்ன மரமா' அல்லது அதன்கீழ் இருக்கும் கல்லா?

ஓடிச்சென்று, பிடித்து நிறுத்தச், சிரிக்கிறாள் சிங்காரி! இயற்கையின் வலிமையை ஒருசேர உலகுக்கு உணர்த்துவதுபோல், வெறியுணர்வு கொண்டு, சுழன்று ஓடும் ஆற்று நீரின் பெருவெள்ளம், சாதாரண

குழலோன்

மனிதனை, உள்ளத்தில் உறுதி இன்றி உணர்ச்சிக்கு ஆட்படும் மனிதப் பிறவிகளை விழுங்கி ஏப்பம் விட எத்தனை நேரமாகும்?

இரைக்க இரைக்க ஓடிவந்த பெரியவர், சீறியெழும் புகைவண்டி ஆவி போல் மூச்சுத் திணற, "நல்லது தம்பி! நல்ல சமயத்திலே காப்பாத்தினீங்க! எம்பொண்ணுதான்! கொஞ்சம் மூளைக்கோறு! வரட்டுமா! வாம்மா தங்கம்! வா! என்றவாறு நகர்ந்தார்.

பரந்துகிடக்கும் உலகில் விரிந்து கிடக்கும் சாற்றைப்போல், மனம் நிறைந்து நின்ற மங்கை — ஆம்! தங்கம் மறைந்துவிட்டாள்! ஆனால், அந்தப் பூவிதழாள், மனதின் பொலிவிழந்தது ஏன்? என்ற வினாக்குறி, என் இதயத்தில் சொல்லில் வடிக்க முடியாத வேதனையைத் தந்தது!

'கலை பொருந்திய முகம்! கால தேவன் இயற்கை என்ற சொல்லுக்குப் பொருள் சேர்த்ததுபோல், அம்மங்கை நல்லாளுக்கு அழகை அள்ளித் தெளித்திருந்தான்! அகல் விளக்கின் அழகுச் சுடராய், வீட்டின் உள்ளே மட்டும் தன் அமைதியான ஒளி உமிழ இருந்த அவள் அழகு, பாலைவனத்தின் வான்நிலவின் ஒளிபோல் பயனற்றுவிட்டதே! அழகிருந்தும், அறிவை மாய்த்துக் கொண்டு ஒரு உணர்வும் அறியாச் சூனியப் பெருவெளியாகி விட்டாளே! பூத்த மலர் காய்க்குமுன்னே வாடுவதா? பழுத்து இனிக்கவேண்டிய அவள் பைத்தியக் காரியானது ஏன்?

அழகுச் சிரிப்புச் சிரித்த அலைகள், பெரும் ஓசையாக எழுந்து, ஏன் என்ற இந்தக் கேள்வியை ஆயிரம் முறை ஒலித்தன. விடை......? வானத்தை நோக்கினேன்......நீல வானத்தில் மோன ஒளி உமிழும் முழு நிலவு; 'நாளை' என்று நினைவூட்டியது! திரண்ட மேகக் கூட்டம் சிதறி மறைவதுபோல், பதறிய இதயம், அமைதி அடைந்தது.

மறுநாள் காலை, குளிக்கத் துண்டுடன், ஆற்றை நோக்கி நடந்தேன்! அங்கு அந்தப் பெரியவர், பகலவன் வணக்கம் செய்துகொண்டிருந்தார்! அவருக்கு நேர் எதிரில், வரும் வழியில், மணலில் நான் உட்கார்ந்தேன்!

நீல வானத்தை மறைத்த மழை மேகத்தைப்போல், துயரம் அவரது முகத்தை மறைத்திருந்தது! ஏன் இருக்காது? பாவை விளக்கான பெண் அவள் பச்சை படிந்து, அலங்

கோலமாகக் காட்சி அளித்தால், கலைஞனுக்கு அழுகை வராமலா இருக்கும்? பாச மகள் பைத்தியமாக இருந்தால், பெற்றவன் மனம், வேதனைப் படாமலா இருக்கும்?

வேதனைக்கு விளக்கம் கேட்டேன் அவரை! விளக்கினார். வேண்டும் அவருக்கு அந்தத் தண்டனை. அவர் மகள் பட்ட வேதனையைவிட, இவர் ஒன்றும் பெரிய துன்பம் அடைந்து விடவில்லை. வேதனை தந்த விளக்கம் என் இதயத்தை கசக்கிப் பிழிவதுபோல் இருந்தது! தோலுரிந்த மாட்டின்மேல் வெங்கதிரோன் ஒளி பட்டால், சுருண்டு விழுவதுபோல், உள்ளம் சுருண்டு முடங்கக், கண்களில், கண்ணீர்த்துளிகள் பள்ளத்தில் விழும் நீர் போல் தேங்கி நின்றன.

அவர் இதயச் சுவரில் மோதி, நுரை ஒதுக்கித் திரும்பவும் துன்ப அலைகளின் ஓசை, என் மனக் குளத்தில், கலங்கின பாசியாக சிதறிக் கூடியது!

O

மழலை இல்லாக் குறை தீர்க்க வந்தவள்தான் தங்கம்! பெண்ணைப் பெற்ற மணியகாரரின் மனைவி, மகளின் பரிதாபதிற்குரிய எதிர்கால வாழ்வை கணக்கிட்டுத்தானோ என்னவோ, மறைந்துவிட்டாள்.

பெண்ணாகப் பிறந்தவள், தாயன்புக்கு ஏங்காவண்ணம் வளர்த்தார் அவர்.

துள்ளிப் பறக்கும் சிட்டாகஆடிய வளுக்குப், பட்டாக மின்னும் காலம் வந்தது. கோடை போய், குளிர் வருவதுபோல், பயமின்றித் திரிந்த தங்கத்தின் பண்பில், ஒரு மாறுதல்! பருவத்தின் விளிம்பில், 'சடுகுடு' ஆடத்தொடங்கிய அவளின் மனம் துணை ஒன்று தேடியது! துணை என்றால், வீட்டுத் தூணாக விரும்பவில்லை அவள்! ஒன்றோடொன்று, அன்பு மொழி பேசிக் கூடிக் குலவி வாழும் குருவிகளாக ஆசைப்பட்டாள். வாடி உலர்ந்த மரத்தில் தழுவ அம்முல்லைக் கொடியாள் விரும்பவில்லை! பச்சை மரத்தில், பாங்குடன் உளம் கலந்து பிணைந்து இறுக விழைந்தது அவளின் இதயம் எனும் அன்புப் பேழை!

அந்தப் பச்சைமரமாகக் காட்சி அளித்தவன்தான், அடுத்த வீட்டு அன்பழகன்! அறிவுப் பெட்டகம் அவன்! கொள்கைக் கோமான்! அவன் அன்பில் தென்றலின் குளிர்ச்சி; முழு நிலவின் மோனப் புன்னகையை உணரும் உள்ளம்!

கொள்கைக் கோல் கொண்டு நிற்பதில், சுற்றிச் சுழலும் சூறாவளி! பொங்கும் அலை! எழுப்பும் புயல் காற்று! நடுப்பகலின், பாலையால் தகிக்கும் ஆதவனின் செந்தழல் வெப்பம்!

அவன் அழகுப் புன்னகையையும் அன்பு இதயத்தையும் ஆராதித்தாள்! ஆவேசப் புயற்காற்று, அழுகிப்போன சமுதாய பித்தலாட்டத்தையும், மக்கள் மனதில் படிந்துவிட்ட சனாதனப் புழுதியையும் ஊதிவிடும்என்ற நம்பிக்கையில், நங்கையவள் நாட்டங்கொண்டாள்.

ஓவியக் காதல் போலன்றிக், தங்கத்தின் காதல், ஆதவனை எதிர் நோக்கும் அழகுத் தாமரையைப் போன்றது! ஆனால் மலரும் இத் தாமரை முகத்தாளுக்கு, தன் முகம் தான் செங்கதிரோனாகக் காட்சி அளிக்கிறது என அறியாதவன் அன்பழகன்.

மலர்ந்த மலரை சூடிக் கொடுக்க முயன்ற, மணியக்காரருக்குத் தோல்வி மேல் தோல்வி! மணம் புரியவந்த எவனும் பிடிக்கவில்லைத் தங்கத்திற்கு!

தண்மதியைக் கண்டு மலரும் அல்லியை, தீ கக்கும் ஆதவனைக் கண்டு மலரச் சொன்னால்...!

வற்புறுத்திக் காரணம் கேட்ட தந்தைக்கு, துணிவு வரவழைத்துக் கொண்டு, அடுத்த வீட்டுஅழகனைச் சுட்டிக்காட்டினாள்!

சுருங்கிக்கிடந்த, பெரியவரின் கண்கள் விரிந்து சிவந்து ஊதிவிட்ட நெருப்புத் தணல்களாக மின்ன, மூக்கின் வழி கோபப் புகை வீசியது!

'அறிவற்றவளே! ஊர்பேர் தெரியாதவன் அடுத்த வீட்டான்! அன்றே சொன்னேன், இதுகளை எல்லாம் தெருவில் குடிவைக்கக் கூடாது என்று! அவன் ஜாதி என்னவோ? குலம் என்னவோ? அதுவும்அவன், கண்டவன்களோடு சேர்ந்து ஜாதி இல்லை, அது இல்லை இது இல்லை என்று, பொறுப்பில்லாமல் திரிகிறான்! அவன் என் மருமகனா வந்தால், நாலு பேர் காரித் துப்பமாட்டாங்களா? இன்று நீ அவனை கட்டிக்கொண்டால், நாளை 'ஐயா! ஐயா!' என்று காலைக் கும்பிடுபவர்களெல்லாம், காளைமாடு மாதிரி நிமிர்ந்து நடக்கமாட்டார்களா' என்று ஒரே வினாக்குறியும், வியப்புக் குறியுமாக நின்றார் அவர்.

சிலந்தி வலையில் சிக்கிய சிற்றெறும்பாக, வேதனை உணர்வுடன் நின்றாள் தூணுக்குப் பின்னால் அவள்! அவளுக்கு என்ன தெரியும் அன்பு மன வெள்ளத்திற்கு இத்தனை அணைகள் கட்டப்படும் என்று?

பயனற்ற அணைகளைத் தகர்க்க அவள் தயார்! ஆனால் அவன்...?

கொள்கைக்கு உயிர் கொடுக்கும் குமரன் அவன், கோதையவள் கொண்டுவிட்ட காதலைத்தான் அறியானே! அடுத்த வீட்டுப் பெண், அஃதும் அழகான பெண் என்று அறிவானே அன்றி, அவனுக்குச் சொந்தமாவதற்குத் துடிக்கும் ஆசைக்கிளி மொழியாள் அவள் என அறியாதவன் அவன்!

அவன் ஒரு தன்னலப்பேய்! சுயநலச் சூறாவளி! அடுத்த வீட்டுத் தங்கத்தைப்பற்றிக் கவலைப்பட நேர மேது அவனுக்கு! 'நம் இனம், நம் நாடு, நம் மொழி, நம் மக்கள் என்று 'நம்' என்பதில், வளரும் அவன், அடுத்த வீட்டு ஆரணங்கைப்பற்றி நினைக்க நேரம் ஏது? அஃதும், அவன் தலைவரிடமிருந்துதான் அழைப்பு வந்துவிட்டதே அறப் போருக்கு!'அகவிலையைக்குறைக்க' ஆண்டவனை வேண்டும் பக்தனைப் போல, அரசாள்வோரிடம் வேண்ட வேண்டும்' என்ற போர்முறை வகுத்தளித்துவிட்டதே கழகம்! அந்த உத்வேகத்திலல்லவோ இருக்கிறான் அன்பழகன்.

வெற்றிக்குக் குறிவைத்து எறிந்த அம்பு, அவளையே தாக்கியதுபோல், துவண்டாள் துடியிடையாள்!

பொய்ம்மை நிறைந்த சமுதாயக் கோட்பாடுகள், வாழத் துடிக்கும் அவள் நினைவும் கனவும் கலந்து உறவாடும் வாழ்க்கையைப், பச்சை நிறம் காட்டும் விளக்காக எண்ணும் பசுமை நிறை வாழ்க்கைக்காக, புரையோடிய சமுதாயக் கட்டுப்பாடுகள் எனும் சிவப்பு விளக்குக் காட்டுவதை அப்பாவை உதறிவிடத் தயாரானாள்! நாளை எண்ணும், தாம் வாழும் வரண்ட வாழ்க்கைக்காக, வாழத் துடிக்கும் வண்ணப் புறாக்களைச் சாவூர் அனுப்பத் துடிக்கும், கொலைகாரப் பெரியவர்களின் முகம் ஏனோ, தான் ஈன்ற குட்டியை உண்ணும், நாயைப்போல் தோன்றியது!

துணிந்து அழகனை அணுகினாள் கடிதம் மூலம்! துணை இன்றி வாடும் இம் மலர்க்கொடிக்குத் துணையாகத் தாங்கள் இருக்கவேண்டும்! தனிமைத் துன்பத்தால் வாடும் என்

இதய நோய்க்குத், தங்கள் அன்பு எனும் அருமருந்து தேவை! நம்மைச் சுற்றி, தனித் தனியாக வரையப்பட்ட சாதி எல்லையைக் கடந்து, 'மனித இனம்' ஒன்றே என்ற எல்லையில், ஒரே வட்டத்தில் சேருவோம்! தங்களின் கொள்கையும், தாங்கள் சார்ந்துள்ள நற்சார்பின் எண்ணமும் எனக்குத் துணிவைத் தந்தது! இந்த வேண்டுகோள், தங்கள் பொதுநல வாழ்க்கைக்குச், சீர்திருத்த நோக்குக்கு ஒரு சோதனை! வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை!'' என்று அவனை வார்த்தை விலங்குகளால் பிணைத்து விட்டார்.

படித்தவன் திகைத்தான்! பூமிக்கு அடியில் ஊறும் இனிய நீரைப் போல், சுரந்து நின்ற அவளின் அன்பு மனதை அவன் அகக் கண்ணால் உணர முடிந்தது! கொள்கை தொண்டு என்று அலைந்த அவன் மனம் அன்புகொண்ட அங்கல்லவளின் கோரிக்கையால் குளிர்ந்தது!

வாழ்க்கையே கடமை நிறைந்தது என எண்ணிய அவனுக்கு, காதலும் கலந்து உறவாடுவது தெரியாது! ஆனால், வலிய வந்த அன்பை, வெறுக்க அவன் என்ன இதயமில்லாதவனா? கடவுளைக் காண மறுக்கும் பக்தனுமில்லை! கடவுளைக் காட்டு பார்க்கலாம் என்று பேசும் பகுத்தறிவாளனும் இல்லாமலில்லை!

நாட்கள் சில தள்ளி, அறப் போரை வெற்றிகரமாக முடித்து, நல்லவர் முன்னிலையில் மணம் முடிப்பதாக வாக்களித்தான்! சூடாகச் சோறு சாப்பிட்டால் சுவை அதிகம்! என்றாள் அவள். வாழ்வு தன்னிடம் விளையாடுவதற்கு முன், தான் வாழ்க்கையுடன் விளையாடிவிடவேண்டும் என்ற மனவெறி அவளுக்கு.

'இல்லைத் தங்கம்! அறப்போரில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உண்டு எங்களிடம்! சென்று வெற்றி கண்டு, இலக்கியத் தலைவனாகத் திரும்புவேன்! புறநானூற்றுத் தலைவிபோல் என் கழுத்தில் வெற்றி மாலை சூடு! அதுவே, நமது மண மாலையாக இருக்கட்டும் என்றான்.

அகவிலைப் போராட்டம், 'ஆர்ப்பாட்டம்' என்று அறிவிக்கப்பட்டது ஆள்வோரால்! வகைசெய்யக் கேட்டவர்களை வஞ்சம் தீர்த்துக்கொண்டனர் அரசினர்! 'அகவிலை குறையுங்கள்! அல்லற்படும் ஏழைகளின் அரை வயிறு கஞ்சியிலும் கல் மண் தூவாதீர்கள்! என்று கேட்டவர்கள் இரக்கமின்றித் தாக்கப்பட்டனர்! அம்மட்டோ அவர்தம் திருவிளையாடல்கள்! பக்தியாகக் கொண்டாடியவனை, பரமன் சோதித்தானமே, அது போல் மக்களின் பொறுமையைச் சோதித்தனர், அவர்தம் குடிசைகளில். அவர்களில் ஒருவள்தான் அன்பழகனின் அன்னையும்! மனதின் ஒருபுறம் மகனின் நிலையறியும் ஆவல் புயல்போல் அலைபாய்ந்தது! மற்றுமொரு புறமோ ஆளும் பரம்பரையினரின் ஆணவப் பேச்சும், செய்கைகளும் குத்தீட்டியாகப் பாய்ந்தது! ஆடிஓய்ந்த அவள் உடல் சாய்ந்துவிட்டது தரையில்! அவளின் வாழ்க்கைப் புயல் ஓய்ந்து விட்டது! பாசப் புத்தகத்தின் பக்கங்கள் பறந்து,' முற்றும்' என்ற வார்த்தை தெரிந்தது!

தங்கம் அன்பழகனின் நிலையறியத் துடித்தாள்! திடீரென நின்றது அவள் துடிப்பு! ஆம்! அவள் இதயத் துடிப்பை நிறுத்தியது அவள் தந்தையின் சொற்கள்!

'வீரன்! இவன் விலைகுறைத்து தான் சமுதாயம் வாழுகிறதோ?' அறிவில்லாத வார்த்தைகளைப் பேசினவன் கதிஇதுதான்! ஆண்டவன் சரியான தண்டனை அளித்தான்! திமிராக நடந்தவன் காலை முறித்து விட்டார்!' என்று ஆளவந்தவர்கள் செய்த பழியை, ஆண்டவன்மேல் சுமத்திவிட்டார் அவள் தந்தை.

தங்கத்தின் உள்ளத்தில் வெறுமை நிரம்பியது. இதயத்தின் பயங்கர அலறலைக் கேட்கமுடியாதவளாகக் காதுகளைப் பொத்திக்கொண்டாள்! அவளின் கண்முன், முறிந்து தொங்கும் கிளைகளென இரண்டு கால்கள் நின்றன! அவள் கண்கள் ஆடிப் பெருக்கெனக் கரைபுரண்டன!

'அப்பா! ஆளவந்தவர்கள் செய்த அராஜகச்செயலை, ஆண்டவன்மேல் பழிபோடுகிறீரே! அன்புகொண்ட இதயத்தைப் பிரிக்கும், அர்த்தமற்ற கட்டுப்பாடுகளை உண்டாக்க வழி செய்த ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் என்றால், அவன் இல்லாமலே போகட்டும்! இறந்தே போகட்டும்!! மறைந்தே போகட்டும்!! என்று அலறி ஓடியவளை தாளிட்டுக் கதவை தடுத்துவிட்டார் தந்தை யெனும் தயாளர்.

அதிர்ச்சி தாங்காத அல்லிக் கொடியாள் துவண்டாள்! மனத்தை மறந்தாள்! மதியை இழந்தாள்! பாவம், பைத்தியமானாள்! தினமும் அவளைப் பிடித்து, அடைத்துக் காப்பதே பெரும் போராட்டமாகி விட்டது அவருக்கு!

மறுநாள் அன்பழகனைக் காண மருத்துவரில்லம் சென்றிருந்தேன்!

'அன்பு! உன் வாழ்க்கைக் கதையுடன் பிணைந்த அழகு மயில் ஒருவளின் வரலாறு கேட்டேன் நான்! கருத்திழந்தவர்கள் திருந்தக் காணிக்கை உங்கள் வரலாறு!' என்றேன்.

'ஆம் நண்பரே! இன்றைய சமுதாயத்தின் நிலை உணர அவளின் கதை ஒரு எடுத்துகாட்டு! ஆனால் பாவம்! அவள் ஆசை உடைந்த மண் கலமாகிவிட்டது! காலிழந்த நான் அவளுக்கு எப்படி வாழ்வளிப்பது!' என்றான் ஏக்கம் தொனிக்க.

வெற்றிடமாகிவிட்ட அன்பழகனின் இதயத்திலிருந்து எழுந்த உயிருள்ள சொற்கள்:

'சமுதாய சீர்திருத்தம் இன்னும் முழுமை பெறவில்லை! அது முழுமை பெற்றிருந்தால் அரசியல் தெளிவு, பகுத்தறியும் தன்மை தானாக ஏற்பட்டிருக்கும்! சனநாயகம் கடைச் சரக்காகி நடுவீதிக்கு வந்திருக்காது! விலைபோகும் சனநாயகமாகி இருக்காது! சோற்றுக்கில்லாத மக்களின் நாக்கில் தேன் தடவி, பதவி பெறும் பரிதாபமான நிலை ஏற்பட்டிருக்காது! அகவிலைப் போராட்டமும் இருந்திருக்காது! நானும் கால்களை இழந்திருக்கமாட்டேன்! சேறு படிந்த சமுதாயத்தில் பூத்துவிட்ட செந்தாமரையாம் தங்கமும், விலங்கின் காலில் சிக்கிச் சிதைவதுபோல் பித்துப் பிடித்தவளாகி இருக்கவேண்டியதில்லை!

'உலகம் இன்று, அவளைப் பைத்தியம் என்று கூறலாம்! ஆனால், அவள் பைத்தியமல்ல! அவள் வாழும் உலகம் தான் பைத்தியக்கார விடுதி! அதில் அவள் ஒருவள் தான் பைத்தியம் தெளிந்தவள்! தெளிந்த உள்ளம் கொண்ட, நல்ல எதிர்காலத்தை அரிக்கும் புழுவாம் மூட நம்பிக்கைகள், கட்டுப்பாடுகள் நீங்கிய நீக்கிய தூயவள்!

அவன் அன்பு மனமும், அழகிய இலட்சிய முழக்கமும், என் காதுகளில் இசையாகப் பெருகி விரிய, அந்த இசைக் கோவைக்கு என் எழுதுகோல் நடனமாடியது!

★

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

இப்பொழுது நடைபெறுகிறது.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
(பதிப்பாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

Best copy av